කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்று கைஅறிக்கை

# Performance Report

## 2020



රබර් සංවර්ධන දෙපාර්තමේන්තුව

වැවිලි අමාත්‍යාංශය

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

பெருந்தோட்டக் அமைச்சு

**Rubber Development Department**

**Ministry of Plantation**

# முன்னுரை

கொவிட் 19 தொற்று நோய் நிலமை நிலவிய போதிலும் இறப்பர் துறையினை அபிவிருத்தியடைந்த துறையாக மாற்றியமைப்பதனைப் போன்று, காணப்பட்ட சவால்களுக்கு மத்தியில் உரிய இலக்கினை எட்டுவதற்காக பொருத்தமான செயற்பாடுகளை முன்னெடுத்து மற்றும் பொருத்தமான வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி அடையளங்காணப்பட்ட இலக்கினை எட்டுவதற்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் வெற்றிகரமான செயற்பாடுகளை மேற்கொண்ட ஆண்டாக 2020 ஆம் ஆண்டை காண்பிக்க முடிகின்றது.

2020 ஆம் ஆண்டில் சிறு தோட்டப் பிரிவினால் 520 ஹெக்டயர் இலக்கிற்கு அமைய இறப்பர் மீள் செய்கையினை மேற்கொண்டு 88% வீத முன்னேற்றமும் 820 ஹெக்டயர் இலக்கின் மூலம் 554.86 ஹெக்டயர் மீள் செய்கையினை மேற்கொண்டு பெருந்தோட்ட கம்பனியினால் **68**% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. இறப்பர் மீள் செய்கையின் கீழ் சிறு தோட்டப் பிரிவில் 269 ஹெக்டயர் இலக்கின் மூலம் 197 ஹெக்டயர் புது செய்கையினை மேற்கொண்டு 73% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதுடன் சிறு தேயிலைத் தோட்ட மற்றும் இறப்பர் தோட்ட புத்தியுரூட்டும் செயற்திட்டத்தின் கீழ் மொணராகல மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 529 ஹெக்டயர் றப்பர் புது செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் இறப்பர் செய்கை நிலப்பரப்பு அளவு அதிகரித்துள்ளது. அத்துடன் பெருந்தோட்ட கம்பனியினாலும் 25 ஹெக்டயர் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நாற்று மேடைகள் மூலம் 1,026,899 றப்பர் கன்றுகளை உற்பத்தி செய்து திணைக்களத்தினால் தாபிக்கப்பட்ட இலக்குகளுக்கு அமைய 2020 ஆம் ஆண்டில் இறப்பர் கன்று உற்பத்தியின் மூலம் 79% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டிற்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்தி **78,205** மெ.தொ. வரை அதிகரித்துள்ளது. 2019 ஆண்டில் காணப்பட்ட இறப்பர் ஏற்றுமதி அளவான 50,006 மெ.தொ. வரை அளவு 2020 ஆம் ஆண்டில் 48,628 மெ.தொ. வரை குறைவடைந்துள்ளது. 13,003 மெ.தொ. ஆகிய 2019 ஆம் ஆண்டில் இயற்கை இறப்பர் ஏற்றுமதி மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் 15,766 மெ.தொன் வரை அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட மழைக் கவசங்களை இடும் வேலைத்திட்டத்தின் கிழ் மழைக் கவசங்கள் இடும் அளவில் துரித வளர்ச்சி காண்பிக்கப்பட்டு இருப்பது 2019 ஆம் ஆண்டில் ஆகும். அதாவது 2,889.37 ஹெக்டயர் அளவினைவிட மழைக் கவசங்களை இடும் அளவினைத் தாண்டி 6,887.47 ஹெக்டயர் மழைக் கவசங்கள் இடப்பட்டதன் மூலம் இதன் வளர்ச்சி காணபிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறப்பர் கேள்வி அதிகரித்ததைத் தொடர்ந்து றப்பர் விலையில் இடம்பெற்ற அதிகரிப்பு இறப்பர் விவசாயின் வருமானம் மீது தாக்கம் செலுத்தியதுடன் 2019

ஆம் ஆண்டில் இலக்கம் 03 றப்பர் சீட் இற்காக காணப்பட்ட ரூபா 272.43 என்ற விலை, 2020 ஆம் ஆண்டில் ரூபா 318.86 வரை அதிகரித்துள்ளது. அத்துடன் இவ் ஆண்டில் மூலதன செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,030.20 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 847.50 மில்லியன் செலவினத்தின் மூலம் 82% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

.

2020 ஆம் ஆண்டில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் இலக்கினை எட்டுவதற்காக அமுல்படுத்தப்பட்ட அனைத்து செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் மற்றும் எட்டப்பட்ட பெறுபேறுகள் இச் செயற்சாதனை அறிக்கை மூலம் துறைக்கு உரியதாக பல்வேறுபட்ட பக்கத்தேற்றங்கள் ஊடாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளதுடன். துறை தொடர்பாக கற்கை ஆய்வினை மேற்கொள்ளும் போது மற்றும் துறையின் அபிவிருத்தியிற்காக கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தினை எடுக்கும் போது இவ் அறிக்கை பெரிதும் பயன்மிக்கதாக அமைகின்றது.

# நன்றி

இறப்பர் செய்கையின் மேம்பாட்டிற்காக துறையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு ரூபா 1410 மி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுள்ளதுடன் இதில் ரூபா 1202.93 மில்லியன் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் நடவடிக்கையாக இறப்பர் உறபத்தியினை அபிவிருத்தி செயற்வதற்கும், இறப்பர் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும், நாட்டில் இறப்பர் செய்கையினை விரிவுபடுத்துவதற்காகவும் செலவிடப்பட்டுள்ளது. அவ் ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி திணைக்களத்திற்கு தமது இலக்கும் மற்றும் நோக்கினை எட்டும் வகையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிற்கு கூடுதலான பங்களிப்புக்களை வழங்குவதற்கும் 2020 ஆம் ஆண்டில் இயலுமை கிடைத்துள்ளது.

திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கு மற்றும் இலக்கினை எட்டும் வகையில் வருடாந்தம் திடடங்களை அமுல்டுத்தும் போது தேவையான வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைப்புக்களை வழங்கிய பெருந்தோட்ட கைத்தொழில் கௌரவ அமைச்சர், பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சின் பணியாளர் சபைக்கும் எனது விஷேட நன்றியினைத் தெரிவிக்கிறேன்.

இறப்பர் துறையின் ஊக்கவிப்பிற்காக திணைக்களத்தினால் எடுக்கப்படும் அனைத்து தீமானங்களும் நாடுதழுவிய மட்டத்தில் அமுல்படுத்தும் செயற்பாடுகள் இடம்பெறுவது பிரதேச அலுவலக வலையமைப்பின் மூலமாகும். வருடாந்த செயற்சாதனை இலக்கினை எட்டும் போது பிரதேச அலுவலகங்களின் பணிப்பாளர்கள் உட்பட பணியாளர் சபையினால் வழங்கப்படும் அயறாத ஒத்துழைப்புக்களை பாராட்ட வேண்டும். அத்துடன் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிற்கு பங்களிப்பு செய்யும் பெரும்பான்மையான சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கும், சிறு இறப்பர் தோட்டத்துறையின் ஈபடும் அனைவருக்கும், பாரியளவு செய்கையின் அபிவிருத்தியிற்கு பங்களிப்பு வழங்கி செயற்பாடுகளை மேற்கொள்ளும் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் பணியாளர் சபைக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் இறப்பரின் விலை தொடர்ந்தும் தளம்பலுக்கு உட்படுவதன் காரணமாக விவசாயிகள் எதிர்பார்க்கும் மட்டத்திற்கு இறப்பர் விலைகள் எட்டப்படாத போதிலும் தனியார் துறையினால் முதிர்ச்சியடையாத இறப்பர் உற்பத்தியின் கொள்வனவு செய்வதன் மூலம் நீண்டகாலம் தொடக்கம் மேற்கொள்ளப்படும் தலையீடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனால் இறப்பர் உற்பத்திக் கைத்தொழிலின் மேம்பாட்டிற்காக பங்களிப்பு வழங்கும் தனியார் துறையின் செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டும். இதன் போது சிறியளவு வர்த்தகர்களைப் போன்று இறப்பர் சார்ந்த உற்பத்தியாளர்களும் பாராட்டப்பட்டது. அத்துடன்

உள்நாட்டு பொர்ருளாதாரத்திற்கு பெறுமதியினை சோர்த்து அந்நியநாட்டு செலாவனியைப் பெற்றுக் கொள்வதற்கு பங்களிப்பு வழங்கும் இறப்பர் சார்ந்த உற்பத்தியாளர்களுக்கும், இறப்பர் மற்றும் இறப்பர்சார்ந்த ஏற்றுமதியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்சாதனையினை எட்டும்போது இறப்பர் செய்கை மற்றும் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களினால் சிறந்த பயன்மிக்கதாகும். இதற்கு அமைய இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம், துறுசவிய நிதியம், இறப்பர் செயலக அலுவலகம் மற்றும் சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட புத்துயிரூட்டும் செயற்திட்டம் ஆகிய நிறுவனங்களினால் கிடைக்கும் ஒத்துழைப்பினை இதன்போது பாராட்டுகிறேன். இறப்பர் செய்கை மூலம் உள்நாட்டு பொர்ருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் மானிட இணைப்பினை மேற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டும் போது இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் அனைத்து பணியாளர் சபையினர்களினாலும் வழங்கப்படும் ஒத்துழைப்புக்களை நன்றியுடன் நிறைவுகூறுகிறேன்.

**மாதவ வர்ணகுலசூரிய**
பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்.

# உள்ளடக்கம்


1. தாபன பக்கத்தோற்றம்
   - 1.1. அறிமுகம் **1-2**
   - 1.2. இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் **03**
   - 1.3. நிறுவனத்தின் நோக்கம் **04**
   - 1.4. நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்று **04**
   - 1.5. நிறுவனத்தின் பிதான பணிகள் **5-6**
   - 1.6. ஒழுங்கமைப்புக் கட்டமைப் **7-9**

2. திணைக்களத்தினால் அமுல்படுத்தும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றங்கள்
   - 2.1. இறப்பர் மீள் செய்கை **10-13**
   - 2.2. இறப்பர் புது செயகை **14-19**
   - 2.3. இறப்பர் கன்று உற்பத்தி **19-22**
   - 2.4. மழைக்கவசங்களை இடும் வேலைத்திட்டம் **23-26**
   - 2.5. பால் பெறும் திறன்சார் பயிற்சி வேலைத்திட்டம் **26-29**
   - 2.6. மாற்று இணைப்பு பயிற்சி வேலைத்திட்டம் **30**
   - 2.7. மழைக் கவசங்களை இடுவதற்கு பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் **31**
   - 2.8. இடைக்கால் பயிற் செய்கை வேலைத்திட்டம் **32-34**
   - 2.9. இயற்கை இறப்பர் கைத்தொழில்சார்ந்த தகவல்கள் **- 2020**
     - 2.9.1. இறப்பர் செய்கை நிலப்பரப்பு அளவு. **34-35**
     - 2.9.2. இறப்பர் உற்பத்தி **36-37**
     - 2.9.3. இறப்பர் உற்பத்தி செலவினம் **37-38**
     - 2.9.4. உள்நாட்டு இறப்பர் நுகர்வு -2020 **39**
     - 2.9.5. இறப்பர் ஏற்றுமதி **40-41**
     - 2.9.6. இறப்பர் இறக்குமதி **41-43**
     - 2.9.7. இறப்பர் விலை **44-47**
     - 2.9.8. அனுமதிப்பத்திரதாரர் இறப்பர் வர்த்தகம் தொடர்பான தகவல்கள் **48**
     - 2.9.9. சர்வதேச செயற்பாடுகள **48-49**
     - 2.9.10. கூட்டிணைந்த நிதியம் **49-50**
     - 2.9.11. செஸ் வரி கிடைப்பனவு மற்றும் அறவீடு **50-52**

3. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த செயற்சாதனை
   - 3.1. நிதி செயற்சாதனை வெளிப்பாடுகள் **53-54**
   - 3.2. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் செயற்சாதனை **54**
   - 3.3. நன்கொடை மற்றும் ஏனைய கிடைப்பனவு தொடர்பான செயற்சாதனை **55**
   - 3.4. நிதியல்லாத சொத்து அறிக்கைப்படுத்தும் செயற்சாதனை **55**
   - 3.5. கணக்காய்வாளர் அறிக்கை **56-64**
   - 3.6. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலமைகள் தொடர்பான வெளிப்பாடுகள் **65**
   - 3.7. நிதிப் பாய்ச்சல் வெளிப்பர்டுகள **66-67**

4. செயற்சாதனை சுட்டி **68**
5. நிலையான அபிவிருத்தி நோக்கினை நிவர்த்தி செய்வதற்கான செயற்சாதனை **69-71**
6. மானிட வளப் பக்கத் தோற்றம் **71-77**
7. ஒப்பீட்டு அறிக்கை **78-85**

# 1. ஆத்தியாயம் - தபான பக்கேத்தோற்றம்

## 1.1. அறிமுகம்

இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆசிய நாடாக இலங்கைக்கு இயற்கை இறப்பர் கைத்தொழிலில்துறையில் விஷேட இடம்காணப்படுகின்றது.''*Hevea Brasiliensis*'' ஆகிய தாவரவியல் பூங்கா என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட இறப்பர் மரங்களின் உரிய தளமாக கருதப்படுவது தென் அமெரிக்காவாகும். ஹென்ரி விக்ஹெம் அவர்களினால் பிரேசிலில் இறப்பர் இறப்பர் காய்களினால் உருவான பல கன்றுகளுடன் 1876 ஆம் ஆண்டில் இலங்கையின் கம்பஹா மாவட்டத்தின் ஹெனரத்கொட பூங்காவில் நாட்டி இலங்கையின் இறப்பர் செய்கையின் ஆரம்பம் இதனைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டது. இற்குப் பின்னா் இலங்கையா்களுக்கு புதிய செய்கையான இறப்பர் செய்கை உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு நேர்மனப்பாங்குமிக்க தாக்கங்களை ஏற்படுத்தி சிறிய மற்றும் பாரியளவு செய்கையாக இலங்கையில் துரிதளவில் விரிவடைந்து இறப்பர் செய்கையிற்கமைய கிரமமாக அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இரண்டாவது உலக புரட்சியின் இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு அதிசிறந்த யுகம் உருவாக்கப்பட்டது.

இலங்கையில் இறப்பர் செய்கை ஆரம்பிக்கப்பட்டு, முதலில் ஈரலிப்பு வலையங்களை கேந்திரமாகக் கொண்டு கண்டி, கேகாலை, இரத்தினபுரி. மாத்தளை, கம்பஹ, கொழும்பு, களுத்துரை, காலி, மாத்தரை, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் வர்த்தக அடிப்படையிலான செய்கையாக இறப்பர் செய்கை விரிவுபடுத்தப்பட்டது. இறப்பர் செய்கையினை நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளும் நோக்குடன் சம்பிரதாயம் அல்லாத பிதேசங்களில் அதாவது மழை வீழ்ச்சி குறைந்த உலர் மற்றும் மற்றும் இடைத்தரகர் வலையத்தில் இறப்பர் செய்கையினை விரிவுபடுத்துவது தொடர்பில் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் மற்றும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் கவனம் செலுத்தியதன் பின்னர் மொணராகல, ஹம்பாந்தோட்டை, அம்பாரை, வவுனியா, அநுராபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் இறப்பர் செய்கையினை விரிவுபடுத்துவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

இலங்கையில் இறப்பர் விலை மற்றும் உற்பத்தி தொடர்பாக கருத்திற்கொள்ளும் போது சாதனை மிக்க உயரிய மட்டத்தில் இறப்பர் விலை மற்றும் இறப்பர் உற்பத்தி 2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதுடன் அவ் ஆண்டில் 1 கிலேகிராம் இறப்பருக்காக (சீட் இறப்பர் இல. 01) ரூபா 513 விலைக்கும் மொத்த இறப்பர் உற்பத்தி 158 மில்லியன் கிலோகிராம் பெறுமதி காணப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் இறப்பர் விலையில் தொடர்ந்து ஏற்படும் தளம்பல்கள் ஒருசில கால எல்லைக்குள் செய்கையாளர்களுக்கு தாங்கிக் கொள்ள முடியாத நிலமையாக மாற்றம் பெற்றுள்ளது. உற்பத்திச் செலவினம் அதிகரிப்பதற்கு இணைவாக இறப்பர் விலை அதிகரிப்பு காணப்படவில்லை என்பதனால் ஒரு சிலசந்தர்ப்பங்களில் உற்பத்தி செலவினம், இறப்பர் விலைக்கு அப்பால் செல்வதனை காண முடிகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் 2019 ஆண்டிற்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் விலையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இடம்பெற்றதுடன் அது (சீட் இறப்பர் இலக்கம் 01) இறப்பர் 1 கிலோகிராமிற்காக ரூபா 288.48 தொடக்கம் 350.48 வரையான அதிகரிப்பாகும்.

இறப்பர் கைத்தொழில், உலகளாவிய இணைப்புக்கள் வளங்களை அடிப்படையாகக் கொண்ட, நவீன தொழில்நுட்பத்துடனான கைத்தொழிலாக இலங்கையின் பொருளதாரத்தில் முக்கிய பங்கு ஆற்றப்படுகின்றது. இக் கைத்தொழில் இயற்கை இறப்பர் உற்பத்தி தொடக்கம் பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பர் சார்ந்த பொருள் உற்பத்தி வரை துரிதமாக மாற்றமடைந்துள்ளது. நாட்டின் இறப்பர் உற்பத்திக்காக சர்வதேச ரீதியில் அதி உயரிய கேள்விகள் காணப்படுவது இவ் இறப்பர் வகைகளின் சிறந்த தரம் மற்றும் நீண்டகாலம் நிலைத்திருப்பதாகும். 2020 ஆண்டில் பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், ஜேர்மன், சீனா. இத்தாலி மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கையின் பிரதான இறப்பர் கொள்வனவாளர்கள் என்பதுடன் அவ் ஆண்டில் இறப்பர் ஏற்றுமதியின் மூலம் பெற்ற வருமானம் ரூபா 151,080 மில்லியனாகும்.

இறப்பர் ஏற்றுமதி ஊடாக அந்நியநாட்டு செலாவனியை உழைப்பதனைப் போன்று அவற்றுடன் தொடர்புபட்ட பொருளாதார பிரதிலாபங்கள் கூடுதலாக காணப்படுகின்றன. இறப்பர்

கைத்தொழிலுடன் பாரிய தொழில்வாய்ப்புக்கள் தோட்ட மக்களுக்கு மற்றும் கிராமிய மக்களுக்கு கிடைப்பது இதில் மிக முக்கியத்துவம் வாயந்த காரணியாகும். இத் தொழில்வாய்ப்புக்கள், பால் வெட்டுதல் தொடக்கம் ஏற்றுமதி வரையான செயற்பர்டுகள் மூலம் உருவாகுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மற்றும் வருமான முறண்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு உதவியாக அமைகின்றது. அது மாத்திரமன்றி சூழல் அடிப்படையில் இயற்கை அழகு மற்றும் வனவளங்களுக்கு பாரிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலில் சமநிலையினைப் பாதுகாப்பதற்கும் இறப்பர் செய்கையின் மூலம் கிடைக்கும் பாரிய பங்களிப்பாகும். மேலும் இறப்பர் மரங்கள் விரகாக மற்றும் எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இறப்பர் விதையினைப் பயன்படுத்தி என்ணெய் உற்பத்தி செய்யப்படுவதுடன் காலநடைகளின் உணவு உற்பத்திக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இது எவ்வாறாக இருப்பினும் தற்போது இறப்பர் செய்கைக்கு ஏற்பட்டுள்ள நிலமைகள் கவலைக்கு உரியதாகும். காலத்துடன் விவசாயிகள் இறப்பர் செய்கையில் இருந்து தூரவிலகிச் செல்வதை காண முடிவதுடன் இறப்பர் செய்கை நிலப்பரப்பின் அளவும் கிரமமாக குறைவடைந்து காணப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் இலங்கை உலகளாவிய இறப்பர் உற்பத்தியின் மூலம் 0.59% மாத்திரம் வழங்கி 14 இடம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. (ANRPC புள்ளிவிவிபரங்களுக்கு அமைய) இந் நிலமைக்காக பிரதான காரணமாக அமைந்திருப்பது உற்பத்திச் செலவினம் அதிகரித்தல், இறப்பருக்காக நியாயமான விலைகள் கிடைக்காமை மற்றும் விலை தொடர்ந்தும் தளம்பலுக்கு உட்படுதல், தொழிலாளர்களின் பற்றாக்குரை, சிறு தோட்ட உரிமையாளர்கள் கூடுதலாக இறப்பர் செய்கையில் இருந்து விலகிச் செல்வது மற்றும் இறப்பர் செய்கைக்கு ஏற்படக் கூடிய நோய்களின் மட்டம் அதிகரித்தல் போன்ற போன்ற காரணிகள் உள்நாட்டு ரீதியில் 19 ஆவது நூற்றாண்டில் ஆண்டின் முதல் காலப்பகுதியில் இறப்பர் செய்கையில் ஈடுபடாத நாடுகள் தற்போது இறப்பர் செய்கைத்துறையில் முன்னிலையினை எட்டியுள்ளமையும் சர்வதேச ரீதியிலான காரணங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை Rubber Study Group (IRSG) சர்வதேச இறப்பர் ஆராய்ச்சி கற்கைக் குழு மற்றும் Association of Natural Rubber Producing Countries (ANRPC)´ இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கங்கள் போன்ற சர்வதேச அமைப்புக்களின் அங்கத்துவத்தைப் பெற்று அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி புள்ளிவபரங்கள், சந்தைப்படுத்தல் தகவல்கள் மற்றும் இறப்பர் கைத்தொழிலின் பல்வேறுபட்ட பக்கத்தோற்றங்கள் ஊடாக பகிர்ந்து, இறப்பர் உற்பத்தி தொடர்பில் சர்வதேச கொள்கையினை அமுல்படுத்தி உள்நாட்டு இறப்பர் கைத்தொழிலின் மேம்பாட்டிற்காக நேரடிப் பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன.

## 1.2. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

இலங்கையின் பிரதான மூன்று ஏற்றுமதிப் பயிர்களில் இறப்பர் கைத்தொழிலுக்கு விஷேட முக்கியத்துவம் காணப்ப:டுகின்றது. ஏற்றுமதி பயிராக நாட்டிற்கு கிடைக்கு அந்நிய நாட்டு செலாவனியைப் போன்று அது சார்ந்த உள்நாட்டு கைத்தொழில் ஊடாக உள்நாட்டு விவசாயிக்கு கிடைக்கும் பிரதிலாபங்கள் அதகிமானது. இதற்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய செயற்பாடுகள் விஷேடமானதாகும் 1956 ஆம் ஆண்டு இலக்கம் 11 கொண்ட இறப்பர் நிருவாக சட்டம் மற்றும் 1953 ஆம் ஆண்டு இலக்கம் 36 கொண்ட இறப்பர் மீள பயிற்செய்கை மானிய உதவி சட்டத்தின் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதங்காக பெருந்தோட்ட அமைச்சின் கீழ் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் செயற்படுகின்றது. 1934 ஆம் ஆண்டில் இலக்கம் 6 கொண்ட கட்டளைச் சட்டத்தின் மூலம் இறப்பர் நிருவாக திணைக்களம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இத் திணைக்களம் 1994 ஆம் ஆண்டில் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய மிகுந்த பலம்மிக்கதாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டது. திணைக்களத்தின் பரவலாக்கள் சேவைகள் முழு நாட்டையும் தழுவக்கூடிய வகையில் தாபிக்கப்பட்டுள்ள 05 உப அலுவலகங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் இப் பிராந்திய அலுவலகங்ளின் மூலம் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படும் அனைத்து மாவட்டங்களையும் தழுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| பிராந்திய அலுவலகங்கள் | தழுவப்பட்ட மாவட்டங்கள் |
|---|---|
| கேகாலை | கேகாலை, கம்பஹ. குருநாகல, கண்டி, மாத்தளை, நுவரெலிய, அநுராதபுரம், பொலன்நறுவை, புத்தளம் மற்றும் வவுனியா. |
| களுத்துரை | களுத்துரை |
| இரத்தினபுரி | இரத்தினபுரி மற்றும் கொழும்பு |
| காலி | காலி, மாத்தரை மற்றும் ஹம்பாந்தோட்டை |
| மொணராகல | மொணராகலை, அம்பாரை மற்றும் பதுளை |

அட்டவணை இலக்கம் I

மேற்கூறப்பட்ட அலுவலகங்களுக்கு மேலதிகமாக திணைக்களத்தில் பதிவு செய்து இறப்பர் செய்கை மேற்கொள்ளும் போது இறப்பர் செய்கையாளர்களுக்கு உயர் தரம் கொண்ட குலோனாக்கள் மூலம் உருவாக்கப்பட்ட இறப்பர் கன்றுகளை வழங்கக் கூடியவகையில் நாடுபூராகவும் விரிவடைந்து காணப்பட்ட நாற்று மேடைகள் முறைமை கீழ் குறிப்பிடப்பட்டவாறு தாபிக்கப்பட்டுள்ளது. சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் கன்று தேவைகளை நிவாத்தி செய்வதற்காக திணைக்களத்திற்கு வாய்ப்புக்கள் கிடைத்துள்ளதுடன் சந்தர்பத்திற்கு ஏற்றவாறு தனியார் பெருந்தோட்ட கம்பனிகளுக்கும் கன்றுகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| நாற்றுமேடையின் பெயர் | மாவட்டம் |
|---|---|
| வெலிகடமுல்ல | கம்பஹா |
| மீரிகம | கம்பஹா |
| ஆகல்ஓயா | களுத்துரை |
| குறுகொட | களுத்துரை |
| கரபிஞ்ச | இரத்தினபுரி |
| மித்தெனிய | ஹம்பாந்தோட்டை |
| குபுக்கன | மொனராகல |
| பதியதலாவ | அம்பாரை |

அட்டவணை இலக்கம் **II**

## 1.3. நிறுவனத்தின் நோக்கம்

- காணப்படும் இறப்பர் செய்கை காணிகளின் பயன்பர்டுகளை மேம்படுத்தல் மற்றும் இறப்பர் நிலப்பரப்பின் அளவினை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியினை மேம்படுத்தல்.

- இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகளின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வதன் மூலம் இறப்பருக்காக கூடுதலான விலையினை வழங்குதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தினை மேம்படுத்தல்.

- இத் துறையில் தொழில்வாய்ப்புக்களை உருவாகுவதனை மேம்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பினை உருவாக்குதல்.

- உள்நாட்டு மரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பங்களிப்பு வழங்குதல்.

- இயற்கை சூழலின் சமநிலையினைப் பாதுகாப்பதற்காக செய்கையின் நீடித்த நிலையான தன்மையினை உறுதிப்படுத்தல்.

## 1.4. நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்று

**இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியிற்காக பெருந்தோட்ட கைத்தொழில்துறையின் முன்னனி பங்காளாராக செயற்படல்.**

**பணிக்கூற்று**

**நாளாந்தம் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு அமைவாக இலங்கையின் இறப்பர் செய்கை மற்றும் இறப்பர் செய்கை சார்ந்த கைத்தொழிலின் பண்புசார் தரம் மற்றும் அளவியல் அபிவிருத்தியிற்காக விவசாய பரவலாக்கள் சேவையினை அமுல்படுத்தல்.**

## 1.5. நறுவனத்தின பிரதான பணிகள்

### 1.5.1. பிரதான அலுவலகத்தின் பிதான பணிகள்

- பிராதான சட்டங்கள் மற்றும் சட்ட மூலங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்தல்.
- பிரதேச அலுவலகங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- மீள் செய்கை மற்றும் புதுச் செய்கை மானிய உதவித் திட்டத்தை நிருவகித்தல் மற்றும் பிரதேச அலுவலகத்தின் மானிய உதவியினை வழங்குவதனை மேற்பார்வை செய்தல்.
- அரசாங்கத்தின நாற்றுமேடை மற்றும் தனியார் இறப்பர் கன்றுகள் மூலம் உயர் தரத்தின் இறப்பர் கன்றினை உற்பத்தி செய்தல் மற்றும் தனியார் துறையின் கன்று உற்பத்திக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
- இறப்பர் வர்ததகம், இறப்பர் சாரந்த உற்பத்தி மற்றும் இறப்பர் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்.
- இறப்பர் செய்கை நிலப்பரப்பின் அளவு, உற்பத்தி, உள்நாட்டு நுகர்வு ஆகிய முக்கியத்துவம் வாய்ந்த புள்ளிவிபரங்கள் மற்றும் தகவ்களை சேகரித்தல்.
- சந்தை தொடர்பாக சிறு இறப்பர் உரிமையாளர்களை அறிவுறுத்தல்..
- இயற்கை இறப்பர் உற்பத்தி, நுகர்வு மற்றும் சந்தை தொடர்பான சர்வதேச அமைப்புக்களுடன் செயற்படல்.
- செஸ் நிதியத்தை சேகரித்தல் மற்றும் நிருவாகம்.
- இறப்பர் செய்கையின் மற்றும் உற்பத்தியின் அவ்வவ் துறைகளுக்கு உரிய சிறிய காணி உரிமையாளர்களுக்கு தேவையான அறிவு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- சிறு தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- இறப்பர் துறையின் பயன்பாடுகள் மற்றும் உற்பத்தியினை மேம்படுத்துவதனை நோக்காக் கொண்டு அரச கொள்கையினை அமுல்படுத்தல் மற்றும் அதற்காக முன்னனி நிறுவனமாக செயற்படல்.
- அரசாங்க வருமானத்தை மதிப்பீடு செய்தல், சேகரித்தல் மற்றும் கணக்கீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

### 1.5.2. பிராந்திய அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள்.

- இறப்பர் செய்கைக்காக காணிகளைப் பதிவு செய்தல்.
- இறப்பர் மீள் செய்கை மற்றும் புது செய்கையினை மேற்கொள்ளல்.
- செய்கையாளர்களுக்காக செய்கை மானிய உதவி உட்பட ஏனைய மானிய உதவிகளை வழங்குதல்.
- இறப்பர் வர்த்தக உரிமையாளர்களுக்காக வர்த்தக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- அரசாங்கத்தின் இறப்பர் கன்று நாற்று மேடைகளை முன்னெடுத்தல் மற்றும் தனியார் கன்று நாற்றுமேடை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.
- விவசாயிகள் மற்றும் தோட்ட உரிமையாளர்களுக்காக தேவையான தொழில்நுடப் ஆலோசனைகளை வழங்குதல்.
- இறப்பர் கன்றுகளை விநியோகித்தர்.
- இறப்பர் செய்கைக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பில் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தை அறிவுறுத்தி அதனை ஒழிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இறப்பர் செய்கை உரிமையாளர்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்தல்.

### 1.5.3. இறப்பர்கன்று நாற்றுமேடைகளின் பிரதான பணிகள்

**தேசிய இலக்கினை அடிப்படையாகக் கொண்டு,**

- மீள் செய்கை மற்றும் புதிய செய்கைக்காக தேவையான தரங்களுடன் உயர் இணைப்பு இறப்பர் கன்று ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிந்துரைகளுக்கு உற்பத்தி செய்து பகிர்தல்.
- இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் புதிய குலோன கண்டுபிப்புக்களுக்கு கூடுதலாக அபிவிருத்தி செய்யப்பட்ட வகைகளை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் பெருந்தோட்ட கம்பனிகளின் கன்று தேவையினை பூரணப்படுத்தல்.

1.6 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

1.6.1. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



**1.6.2. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிறுவனங்களின் கட்டமைப்புக்கள்**



1.6.3 திணைக்களத்தின் பணியாளர் சபை தகவல்கள்

| தொடர். இலக். | பதவி | அங்கீகரிக் கப்பட்ட அளவு | தற்போது இருக்கும் அளவு | வெற்றிட எண்ணிக் கை |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் (இ. நி. சே) விஷேட | 1 | 1 | 0 |
| 02 | மேலதிக பணிப்பாளர் நாயகம் (இ. நி. சே) | 1 | 1 | 0 |
| 03 | பணிப்பாளர் / பிரதேச பணிப்பாளர் (இ. நி. சே) | 7 | 2 | 5 |
| 04 | பணிப்பாளர் (இ. தி. சே.) | 1 | 1 | 0 |
| 05 | பணிப்பாளர் (திணைக்களம்) | 1 | 0 | 1 |
| 06 | பிரதம கணக்காளர் (இ.க.சே) | 1 | 1 | 0 |
| 07 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் (இ.க.சே) | 1 | 1 | 0 |
| 08 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (இ. நி. சே) | 12 | 9 | 3 |
| 09 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (திணைக்களமய) | 1 | 0 | 1 |
| 10 | சட்ட உத்தியோகத்தர் (திணைக்களம்) | 1 | 0 | 1 |
| 11 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (இ.தி.சே.) | 1 | 1 | 0 |
| 12 | கணக்காள் (இ.க.சே) | 6 | 4 | 2 |
| 13 | பிரதிப் பணிப்பாளர் (இ. த. மற்றும் தொ. தொ) | 1 | 1 | 0 |
| 14 | உதவிப் பணிப்பாளர் (இ. த. மற்றும் தொ. தொ) | 2 | 1 | 1 |
| 15 | நிருவாக உத்தியோகத்தர் (அ .பொ. உ. சே.- விஷேட) | 4 | 3 | 1 |
| 16 | சிரேஷ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்டம் (திணைக்களமய) | 17 | 7 | 10 |
| 17 | மொழி பெயர்ப்பாளர் சிங்களம் / தமிழ் (அ.மொ.சே) | 1 | 0 | 1 |
| 18 | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இ. த. மற்றும் தொ. தொ) | 2 | 0 | 2 |
| 19 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (இ. த. மற்றும் தொ. தொ) | 5 | 3 | 2 |
| 20 | அபிவிருத்தி உத்தியோகத்தர் (அ. உ. சே) | 22 | 23 | 0 |
| 21 | எழுது வினைஞர் / தட்டெழுத்தாளர் (திணைக்களம்) | 8 | 6 | 2 |
| 22 | நாற்றுமேடை முகாமையாளர் (திணைக்களம்) | 2 | 2 | 0 |
| 23 | கட்ட பராமரிப்ப உத்தியோகத்தர் (திணைக்கள) | 1 | 1 | 0 |
| 24 | அரச முகாமைத்துவ உதவியாளர் (அ.மு.சே.) | 120 | 115 | 5 |
| 25 | முாகமைத்துவ உதவியாளர் (மு. சே.) | 5 | 8 | 0 |
| 26 | இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (திணைக்களமய) | 170 | 120 | 50 |
| 27 | சாரதி (சா.சே) | 40 | 24 | 16 |
| 28 | சாரதி (திணைக்களம்) | 1 | 1 | 0 |
| 29 | லொரி உதவியாளர் (திணைக்களம்) | 10 | 10 | 0 |
| 30 | அலுவலகப் பணி உவதியாளர் (அ. உ. சே.) | 33 | 31 | 2 |
| | **மொத்தம்** | **478** | **377** | **105** |

அட்டவணை இலக்கம் III

# 2. அத்தியாயம் - திணைக்களத்தினால் அமுல்படுத்தும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றங்கள்

முன்னைய ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு 2020 ஆம் ஆண்டில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் இலக்காக் கொள்ளப்பட்ட நோக்கங்களை எட்டும் வகையில் கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளை அடிப்படையாகக் கொண்டு அடிப்படை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. இறப்பர் மீள் செய்கையினை மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள் - (சிறு தோட்ட / பெருந்தோட்டக் கம்பனி)
2. இறப்பர் புதுச் செய்கையினை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் (சிறு தோயிலைத் தோட்டம்)
3. பண்புசார் தரம்மிக்கதாக இணக்கப்பட்ட இறப்பர் கன்று உற்பத்தி.
4. மழைக்கவசங்களை இடும் வேலைத்திட்டம் - சிறு தோட்டம் / பெருந்தோட்டம்)
5. பால வெட்டும் திறன் பயிற்சி - (பொதுவான / தொழில்சார்)
6. மழைக்கவசங்களை இடும் பயிற்சி வேலைத்திட்டம்.
7. ஓட்டுப்பிடித்தலுக்கான செயன்முறைப் பயிற்சி
8. இடைக்காலப் பயிற்சி வேலைத்திட்டம்.

## 2.1. இறப்பர் மீள் செய்கை

இறப்பர் செய்கைக் காணியில் காணப்படும் பழைய இறப்பர் செய்கையினை அகற்றி புதிய இறப்பர் கன்றுகளை செய்கை மேற்கொள்ளும் இறப்பர் மீள் செய்கையாக கருதப்படுகின்றது. இறப்பர் மீள் பயற்செய்கை மேற்கொள்ளும் தேவைகள் எழுவது இறப்பர் காணியில் காணப்படும் இறப்பர் பயிர் முதிர்வு அடைதல், செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள செய்கையின் உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைதல் போன்ற காரணங்களின் அடிப்படையிலாகும். இறப்பர் மீள் செய்கைக்காக விவசாயிகள் ஆர்வத்தை ஈர்க்கச் செய்வதற்காக ஒத்தாசையாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பிரதேச பெருந்தோட்ட கம்பனிக்கு மீள செய்கை மானிய உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். திணைக்களத்தினால் மீள் செய்கை மேற்கொள்ளப்படும் காணியில் ஒரு ஹெக்டயருக்காக ரூபா **350,000** வீதம் செய்கை மானிய உதவி வழங்கப்படுகின்றது.



**மீள் செய்கை மேற்கொள்ள வேண்டிய இறப்பர் செய்கை**

2020 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு சிறு தோட்டப் பிரிவினால் மீன் செய்கைக் 1,069 விண்ணப்படிவங்கள் சமர்பிக்கப்பட்டதுடன் அதில் அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டது 966 விண்ணப்படிவங்களுக்கு மாத்திரமாகும். அவ் விண்ணப்படிவங்களின் 640 விண்ணப்பதாரர்களினால் **457** ஹெக்டயர் நிலப்பரப்பு அளவு இறப்பர் மீன் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறு தோட்டப் பிரிவின் **520** ஹெக்டயர் இலக்கிற்கு அமைய இறப்பர் மீன் செய்கையின் 88% பௌதீக முன்னேற்றங்கள் திணைக்களத்தினால் எட்டப்பட்டுள்ளதுடன் அதற்கு உரியதான தகவல்கள் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்படப்பட்டுள்ளது.

**சிறு தோட்ட பிரிவினால் இறப்பர் மீன் செய்கை மானிய உதவி திட்டத்தின் கீழ் மீன் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு - 2020**

| மாவட்டம் | இலக்கம் (ஹெக்.) | கிடைத்த விண்ணப்ப படிவங்களின் எண்ணிக்கை | விண்ணப்படிவங்களுக்கு உரிய நில அளவு (ஹெக்) | வழங்கப்பட்ட விண்ணப்படிவங்களின் எண்ணிக்கை | அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்ட நிலபரப்பு அளவு (ஹெக்.) | மீன் செய்கை மேற்கொள்ளபட்ட அனுமதிப்பத்தரங்களின் எண்ணிக்கை | மீன் செய்கை மேற்கொள்ப்பட்ட அளவு (ஹெக்.) |
|---|---|---|---|---|---|---|---|
| **களுத்துரை** | 100 | 193 | 168 | 166 | 149 | 116 | 92 |
| **கேகாலை** | 200 | 501 | 352 | 457 | 317 | 307 | 192 |
| **கம்பஹ** | 40 | 46 | 29 | 42 | 28 | 31 | 21 |
| **குருநாகலை** | 15 | 31 | 30 | 27 | 26 | 19 | 23 |
| **கண்டி** | 10 | 42 | 28 | 24 | 19 | 10 | 7 |
| **மாத்தளை** | 5 | 03 | 19 | 03 | 14 | - | - |
| **இரத்தினபுரி** | 70 | 158 | 135 | 152 | 123 | 94 | 66 |
| **கொழும்பு** | 30 | 56 | 66 | 56 | 64 | 39 | 39 |
| **காலி** | 10 | 11 | 06 | 11 | 6 | 04 | 3 |
| **மாத்தரை** | 25 | 17 | 18 | 17 | 18 | 09 | 7 |
| **மொணராகலை** | 07 | 11 | 8 | 11 | 7 | 11 | 7 |
| **பதுளை** | 08 | - | - | - | - | - | - |
| மொத்தம் | **520** | **1069** | **859** | **966** | **771** | **640** | **457** |

அட்டவணை இலக்கம் IV

இதற்கு அமைய 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் இலக்காக் கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவினைத் தாண்டி விவசாயிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்ட போதிலும் அதற்கு இணைவாக அவ் அனுமதிப்பத்திர உரிமையாளர்களினால் செய்கை செயற்பாடுகள் மேற்கொள்ளாதிருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அடிப்படையில் சிறு தோட்டப் பிரிவினால் இறப்பர் மீன் செய்கை மேற்கொள்ளப்பட்ட முறைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

வரைபட இலக்கம் i

**சிறு தேயிலைத் தோட்டப்பிரிவினால் இறப்பர் மீள் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்டயர்) - 2020**




மேற்கூறப்பட்ட வரைபடத்திற்கு அமைய 2020 ஆம் ஆண்டில் ஏனைய மாவட்டங்களைத் தாண்டி கேகாலை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் கூடுதலான இறப்பர் மீள் செய்கை மேற்கொள்ளப்படுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆண்டில் இறப்பர் மீள் செய்கைக்காக திணைக்களத்தினால் ரூபா 259.39 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. சிறு தோட்ட பிரிவினைப் போன்று பிரதேச பெருந்தோட்ட கம்பனியும் இறப்பர் மீள் செய்கையில் உயர்ந்தபட்ச பங்களிப்பினை வழங்கியுள்ளது. பெருந்தோட்ட கம்பனயினால் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் மீள் செய்கை தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**இறப்பர் மீள் செய்கை பெருந்தோட்டக் கம்பனி - 2020**

| தோட்டக் கம்பனி | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நில அளவு (ஹெக்டயர்) | மீள் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்டயர்) |
|---|---|---|
| நமுனுகுல பெருந்தோட்ட கம்பனி | 7.00 | 7.00 |
| கேகாலை பெருந்தோட்டக் கம்பனி | 467.00 | 76.32 |
| களனிவெலி கம்பனி | 11.23 | 11.23 |
| மல்வத்தவெலி பெருந்தோட்க் கம்பனி | 68.5 | 43.88 |
| லளாலன் பெருந்தோட்டக் | 166.22 | 158.57 |

| | | |
|---|---|---|
| கம்பனி | | |
| புஸ்ஸல்ல பெருந்தோட்ட க்பனி | 76.74 | 96.90 |
| அகலவத்ததை பெருந்தோட்டக் கம்டினி | 173.58 | 125.46 |
| மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 35.50 | 35.50 |
| **மொத்தம்** | **970.27** | **554.86** |

அட்டவணை V

2020 ஆம் ஆண்டில் பெருந்தோட்டக் கம்பனிக்காக அடையாளம் காணப்பட்ட 820 ஹெக்டயர் இலக்கிற்கு மத்தியில் 554.86 ஹெக்கடயர் செய்கை மேற்கொள்ளப்பட்டு பெருந்தோட்ட கம்பனி இறப்பர் மீள் செய்கை மூலம் 68% பௌதீக முன்னேற்றத்தை எட்டுவதற்கு முடிந்துள்ளது. திணைக்களத்தினால் பெருந்தோட்ட கம்பனிக்கு இறப்பர் மீள் செய்கைக்காக ரூபா 203.01 நிதி ஒதுக்கப்பட்டு இருந்ததுடன் அதில் ரூபா 181.36 மில்லியன் செலவிட்டு 89% சதவீத நிதி முன்னேற்றம் எட்டப்படுள்ளது. 2020 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட கம்பனியித் துறையின் இறப்பர் மீள் செய்கை நிலப்பரப்பு அளவிற்கு 28.5% பங்களிப்பினை வழங்கி ஏனைய பெருந்தோட்ட கம்பனியிற்கு அப்பால் லலான் பெருந்தோட்ட கம்பனி முன்னியில் இருப்பது முக்கியத்துவம் மிக்கதாகும்.

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டில் மொத்த மீள் செய்கை இலக்கு ஹெக் 1,340 ஆக காணப்பட்ட போதிலும் மீள் செய்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பது ஹெக் 1012 நிலப்பரப்பு அளவாகும். இதற்கு அமைய இறப்பர் மீள் செய்கையின் மொத்த பௌதீக முன்னேற்றம் 76% ஆகும்.

**இறப்பர் மீள் செய்கை நிலப்பரப்பு அளவு (2012 – 2020)**
**(ஹெக்கடயர்)**

| ஆண்டு | சிறு தோட்டம் | பெந்தோட்ட கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| **2012** | 1,117 | 2,126 | 3,243 |
| **2013** | 1,710 | 2,784 | 4,494 |
| **2014** | 1,343 | 1,554 | 2,897 |
| **2015** | 614 | 1,303 | 1,917 |
| **2016** | 538 | 1,048 | 1,586 |
| **2017** | 787 | 400 | 1,187 |
| **2018** | 525 | 336 | 861 |
| **2019** | 578 | 462 | 1,040 |
| **2020** | 457 | 555 | 1,012 |

அட்டவணை **VI**

**இறப்பர் புதிய செய்கை**

காணப்படும் இறப்பர் செய்கை காணியின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் மற்றும் இறப்பர் செய்கை நிலப்பரப்பு அளவினை மேம்படுத்துவதன் மூலம் காணப்படும் இறப்பர் உற்பத்தி அதிகரிப்பின் ஊடாக பொருளாதார வளர்சிக்கு பங்களிப்பு செய்வது திணைக்களத்தின் அடிப்படை நோக்கமாகும். மறைமுகமாக துறையில் புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் வருமானத்தை மேம்படுத்தல், செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளில் செய்கை பரவலாக்கள் மேற்கொள்வதன் மூலம் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு எதிர்பாாக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட தகவல்களுக்கு அமைய 2020 ஆம் ஆண்டில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

| மாவட்டம் | இலக்கு | கிடைத்த விண்ணப்படிவங்களின் எண்ணிக்கை | விண்ணப்படிவங்களுக்கு உரிய நிலப்பரப்பு அளவு (ஹெக்டயர்) | வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கை | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அளவு (ஹெக்டயர்) | புதிய செய்கை பூர்த்தி செய்த அனுமதிப்பத்திரதாரர்களின் எண்ணிக்கை | பூரண அசய்'மூக மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| களுத்துரை | 15 | 58 | 25.58 | 50 | 18.78 | 33 | 14.27 |
| கேகாலை | 25 | 135 | 54.01 | 114 | 45.97 | 82 | 32.25 |
| கம்பஹா | 01 | 20 | 13.23 | 16 | 11.46 | 10 | 7.05 |
| குருநாகல | 12 | 16 | 17.16 | 14 | 8.96 | 08 | 5.08 |
| புத்தளம் | - | 01 | 8.09 | 01 | 8.09 | - | - |
| கண்டி | 01 | 19 | 9.50 | 14 | 7.33 | 08 | 4.20 |
| மாத்தளை | 51 | 31 | 12.34 | 29 | 11.54 | 20 | 5.50 |
| இரத்தினபுரி | 20 | 78 | 44.23 | 69 | 41.06 | 57 | 30.43 |
| கொர்மும்பு | 10 | 16 | 14.14 | 13 | 12.73 | 07 | 5.77 |
| காலி | 05 | 10 | 5.70 | 10 | 5.70 | 07 | 2.13 |
| மாத்தரை | 05 | 14 | 9.14 | 14 | 9.14 | 10 | 2.97 |
| ஹம்பாந்தோட்டை | 10 | 19 | 8.07 | 19 | 8.07 | 11 | 5.02 |
| மொணராகளை | 70 | 124 | 77.76 | 115 | 68.93 | 106 | 63.99 |
| பதுளை | 20 | 31 | 15.22 | 31 | 15.22 | 28 | 12.33 |
| அம்பாறை | 10 | 02 | 0.85 | - | - | - | - |
| அரசாங்கத்தின் நாற்றுமேடை | 05 | - | - | - | - | - | 06 |
| **மொத்தம்** | **260** | **574** | **315.02** | **509** | **272.98** | **387** | **196.99** |

அட்டவணை இலக்கம் VII

செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தல் மற்றும் இயற்கை சூழலில் சமநிலையினை பாதுகாப்பதற்காக செய்கையின் நீடித்த நிலையான தன்மையினை பாதுகாப்பது புதிய செய்கையின் ஏனைய நோக்கமாகும். இறப்பர் புதிய செய்கையினை மேற்கொள்ளும் போது சிறு தோடடப் பிரிவிற்காக மாத்திரம் செய்கை மானிய உதவியினை வழங்கும் பணிகள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. கீழ் அட்டவணைய மூலம் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக இறப்பர் புதிய செய்கை தொடர்பில் தகவல்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

**திணைக்களத்தின் மானிய உதவியின் கீழ் இறப்பர் புதிதாக செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு - 2020 (சிறு தோட்டம்)**

மேற்கூறப்பட்ட தகவல்களுக்கு அமைய 2020 ஆம் ஆண்டில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் 260 ஹெக் இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளும் இலக்கினை எட்டியதுடன் சிறு தோட்டப் பிரிவினால் 196.99 ஹெக்டயரும் பெருந்தோட்டக் கம்பனியினால் 25.39 ஹெக்டயரும் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதகிமாக அரசாங்கத்தின் நாற்று மேடைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட 6 ஹெக்டயர் மாதிரி இறப்பர் புதிய செய்கை வேலைத்திட்டம் உட்பட உத்தேச ஆண்டின் மொத்த இறப்பர் புதிய செய்கை நிலப்பரப்பின் அளவு 222.38 ஹெக்டயராகும். இதற்கு அமைய 2020 ஆம் ஆண்டில் இறப்பர் புதிய செய்கையின் மூலம் 86% சதவீத பௌதீக முன்னேற்றத்தை எட்ட முடிந்ததுடன் அதற்காக திணைக்களத்தினால் ரூபா 117.69 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இவ் ஆண்டில் சிறு தோட்டப் பிரிவினால் 15 மாவட்டங்களில் இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பரவலாக்கள் கீழ் குறிப்பிடப்பட்ட வரைபின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

வரைபட இலக்கம் ii

**2020 இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்டயர் ) – சிறு தோட்டம்**



மேற்கூறப்பட்ட வரைபடத்திற்கு அமைய 2020 ஆம் ஆண்டில் மொணராகல, கேகாலை, மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இறப்பர் புதிய செய்கை கூடுதலாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய மாவட்டங்களைத் தாண்டி மொணராகல மாவட்டத்தில் இறப்பர் புதிய செய்கைக்கு முன்னுரிமை கிடைத்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மெணராகல மாவட்டத்தில் விவசாயிகள் விவசாய பயிராக இறப்பர் செய்கையினை தோந்தெடுப்பது உயரிய முன்னேற்றத்தைக் காண்பித்திருப்பதனை கண்கூடாக காணமுடிகின்றது. அத்துடன் கேகாலை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தமது இலக்கினைத் தாண்டி இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் வருடாந்தம் புதிய செய்கை நிலப்பரப்பு அளவிற்கு உயரிய பங்களிப்பு வழங்கப்பட்ட மாவட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை VIII**

| ஆண்டு | மாவட்டம் | செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பராப்பு அளவு (ஹெக்.) |
|---|---|---|
| 2015 | அம்பாரை | 400 |
| 2016 | அம்பாரை | 213 |
| 2017 | மொணராகலை | 102 |
| 2018 | மொணராகலை | 158 |
| 2019 | மொணராகலை | 89 |
| 2020 | மொணராகலை | 64 |

மேலும் மேற்கூறப்பட்ட தகல்களுக்கு அமைய கடந்த காலம் தொடக்கம் இறப்பர் செய்கைக்கு முக்கியத்துவம் மிக்க சம்பிரதாய பிரதேசங்களுக்கு அப்பால் சென்று சம்பிரதாயம் அல்லாத பரதேசங்களில் இறப்பர் செய்கையினை பிரபல்யப்படுத்தி உள்நாட்டு பொருளாதாரம் பலப்படுத்தப்படுவது சித்தரித்துக் காண்பிக்கப்படுகின்றது. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் மானிய உதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் இறப்பர் புதிய செய்கைக்கு மேலதிகமாக சிறு தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரூட்டும் செயற்திட்டத்தின் கீழ் இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

## சிறு தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரூட்டும் செயற்திட்டம் (Smallholder Tea and Rubber Revitalization Project (STaRR)

சிறு தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரூட்டும் செயற்திட்டம் 08 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது மாத்தரை, காலி, இரத்தினபுரி, நுவரெலிய, கண்டி மற்றும் பதுளை ஆகிய 06 மாவட்டங்களில் தேயிலை செய்கையும் மொணராகலை மற்றும் அம்பாறை ஆகிய இரு மாவட்டங்ளிலும் இறப்பர் செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. இச் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுவது விவசாயத்திற்கான புதிய சர்வதேச நிதியத்தின் (IFAD) மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பின் கீழ் ஆகும்.

இச் செயற்திட்டத்தின் அடிப்படை இலக்காக அமைந்திருப்பது கிராமிய வறுமையின் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வருமானத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதாகும். சம்பிரதாயம் அல்லாத பிரதேசங்களான அம்பாறை, மொணராகலை ஆகிய மாவட்டங்களில் 3000 ஹெக்டயரில் இறப்பர் செய்கையினை இலக்காக் கொண்டு அதன் கீழ்

இறப்பர் விவசாயிகளுக்கு புதிய செய்கைக்காக மானிய உதவியினை வழங்குவதற்கும், அரசாங்கத்தின் கன்று நாற்று மேடையான பதியதலாவ இறப்பர் கன்று நாற்று மேடையின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தவற்கு நிதி உதவியினை வழங்குவதும், சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நிதி உதவிகளை வழங்குவதல் போன்றன இச் செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பிரதான பணிகளாகும்.

இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் ஊடாக இச் செயற்திட்டத்திற்காக தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுவதுடன் செயற்திட்ட கால எல்லை 2016 – 2022 ஆகும்.

சிறு தேயிலை மற்றும் இறப்பர் புத்துயீரூட்டும் செயற்திட்டத்தினி அறிக்கைகளுக்கு அமைய அம்பாறை மற்றும் மொணராகலை ஆகிய மாவட்டங்களில் 2016 தொடக்கம் 2020 வரை வருடாந்தம் இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்ட முறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இச் செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ் ஆண்டு தொடக்கம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் மொணரகலை பிராந்திய அலுவலகத்தினால் இறப்பர் செய்கை மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டதுடன் உரிய செயலவினங்கள் இச் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

| ஆண்டு | செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு(ஹெக்.) | | செலவிடப்பட்ட நிதி (ரூபா.மி.) | | செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | அம்பாறை | மொணரகலை | அம்பாறை | மொணராகலை | அம்பாறை | மொணராகலை |
| **2016** | 55 | 197 | - | 16.00 | 71 | 327 |
| **2017** | 7 | 315 | - | 11.60 | 11 | 561 |
| **2018** | 224 | 407 | 7.92 | 64.91 | 380 | 725 |
| **2019** | 317 | 573 | 62.80 | 96.33 | 465 | 1,023 |
| **2020** | 196 | 333 | 118.06 | 268.67 | 344 | 652 |
| **2021 இலக்கு** | 200 | 178 | 257.38 | 217 | 500 | 445 |

**அட்டவணை இலக்கம் IX**

**இலங்கையில் இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்த நிலப்பரப்பு அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இறப்பர் புதிய செய்கை நிலப்பரப்பு அளவு (2012 – 2020)**

| ஆண்டு | சிறு தோட்டம் | பெருந்தோட்ட கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| **2012** | 2,297 | 1,086 | 3,383 |
| **2013** | 2,979 | 912 | 3,891 |
| **2014** | 1,428 | 133 | 1,561 |
| **2015** | 769 | 56 | 825 |
| **2016** | 592 | 23 | 615 |
| **2017** | 700 | 335 | 1,035 |
| **2018** | 981 | 48 | 1,029 |
| **2019** | 1,103 | - | 1,103 |
| **2020** | 726 | 25 | 751 |

**அட்டவணை இலக்கம் X**

**செய்கை மானிய உதவிக் கொடுப்பனவு**

இறப்பர் மீள் செய்கை மானிய உதவித் திட்டத்தை அமுலப்படுத்ததுவதன் அடிப்படை நோக்கமாக அமைந்திருப்பது உற்பத்தித்திறன் குறைந்த பழைய இறப்பர் செய்கையினை அகற்றி அக் காணியினை மீள உற்பத்தித்திறன் கூடிய குலோனாக்களைக் கொண்ட புதிய இறப்பர் செய்கையினை உருவாக்குவதாகும். இறப்பர் புதிய செய்கையின் மானிய உதவியினை அமுல்படுத்துவதன் மூலம் இறப்பர் செய்கை நிலப்பரப்பு அளவினை அதிகரித்தல், செய்கை பரலாக்களை மேற்கொள்வதன் மூலம் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு எதிர்பாாக்கப்படுகின்றது.

மானிய உதவித் திட்டத்தின் கீழ் இறப்பர் புதுச் செய்கை அல்லது செய்கை மேற்கொள்வதற்காக 1953 இலக்கம் 36 கொண்ட இறப்பர் மீள செய்கை மேற்கொள்ளும் சட்டத்தின் 07 ஆவது வாசகத்திற்கு அமைய அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். இச் சட்டத்திற்கு அமைய அனைத்து இறப்பர் காணி திணைக்கத்திலும் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட இறப்பர் காணி காணப்படும் செய்கையில் 20 வருடங்கைளத் தாண்டியதன் பின்னர் அக் காணியில் மானிய உதவித் திட்டத்தின் கீழ் மீள் செய்கையினை மேற்கொள்வதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு தகவமை பெறும்.

இறப்பர் செய்கையில் ஈபட்டுள்ளவர்களை தொடாந்தும் ஊக்கவிப்பதற்காக ஒரு ஹெக்டயருக்கு வழங்கும் மானிய உதவி நிதி 2019.01.01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தபட்டவாறு இரட்டிப்பாக அதிகரித்து கீழ் குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்படும்.

புதிய செய்கைக்காக ஹெக்கடயருக்கு ரூபா. 300,000.00

மீள் செய்கைக்காக ஹெக்டயருக்கு ரூபா. 350,000.00

இம் மானிய உதவி நிதி 08 தவணைகளில் செலுத்தப்படும்.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்குள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அவ்வவ் செய்கைக்காக மானிய உதவிக் கொடுப்பனவிற்கு திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**இறப்பர் செய்கைக்கான மானிய உதவிக் கொடுப்பனவு**

| செயற்திட்டம் | செலுத்தப்பட்ட நிதி (ரூபா.மி.) |
|---|---|
| 2020 மீள் செய்கை மானிய உதவி (சிறு தோட்டம்) | 259.39 |
| 2020 மீள் செய்கை மானிய உதவி (பெரந்தோட்டக் கம்பனி) | 181.36 |
| 2020 புதிய செய்கை மானி உதவி (சிறு தோட்டம்) | 117.69 |
| **மொத்தம்** | **558.44** |

அட்டவணை இலக்கம் **XI**

## 2.3. இறப்பர் கன்று உற்பத்தி

### 2.3.1. அரசாங்கத்தின் நான்று மேடை

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிற்காக இறப்பர் செய்கையின் பங்களிப்பினை அதிகரிப்பது திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். இதற்கு அமைய இறப்பர் உற்பத்தியின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக உயர் தரத்தின் குலோனா கொண்ட வெற்றிகரமான இறப்பர் கன்றுகளை உற்பத்தி செய்வது அத்தியவசியமாகும். இதற்கு அமைய 2020 ஆம் ஆண்டிற்கு உரியதாக செய்கை மற்றும் புதிய செய்கையின் இலக்கினை இனங்கண்டு அதற்காக தேவையான இறப்பர் கன்றுகளை உற்பத்தி செய்யும் செயற்பாடுகள் நாற்று மேடைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 08 இறப்பர் கன்று நாற்றுமேடைகள் தாபித்து கன்றுகளை உற்பத்தி செய்வதனைப் போன்று கன்றுகளை விநியோகிக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றது.



மொணராகலை – கும்புகன இறப்பர் கன்று நாற்றுமேடை



களுத்துரை குருகொட இறப்பர் கன்று நாற்றுமேடை



அம்பாறை பதியதலாவ இறப்பர் கன்று நாற்றுமேடை



கம்பஹா வெலிகடமுல்ல இறப்பர் கன்று



களுத்துரை – ஆகல்ஓயா இறப்பர் கன்று நாற்றுடை

**அரசாங்கத்தின் கன்று நாற்றுமேடை உற்பத்தி மற்றும் கன்று விநியோகம் - 2020**

| நாற்று மேடையின் பெயர் | நாற்றுமேடை அமைந்துள்ள மாட்டம் | இலக்கு | கன்று உற்பத்தி 2020 | கன்று விநியோகம் 2020 |
|---|---|---|---|---|
| குறுகொட | களுத்துரை | 200,000 | 108,749 | 140,887 |
| ஆகல்ஓயா | களுத்துரை | 200,000 | 87,152 | 95,345 |
| வெலிகடமுல்ல | கம்பஹ | 200,000 | 145,174 | 179,490 |
| மீறிகம | கம்பஹ | 50,000 | 11,550 | 3,620 |
| குபுக்கன | மொனராகல | 300,000 | 407,263 | 348,767 |
| பதியதலாவ | அம்பாறை | 75,000 | 114,543 | 75,617 |
| கரபின்ச | இரத்தினபுரி | 75,000 | 103,048 | 68,845 |
| மித்தெனிய | ஹம்பாந்தோட்டை | 75,000 | 49,420 | 64,932 |
| **மொத்தம்** | | 1,175,000 | 1,026,899 | 977,503 |

அட்டவணை இலக்கம் XII

இதற்கு அமைய 2020 ஆம் ஆண்டில் 1,175,000 கன்றுகள் உற்பத்தி இலக்கிற்கு மத்தியில் இறப்பர் கன்று 1,026,899 வெறிகரமாக உற்பத்தி செய்து **87%** பௌதீக முன்னேற்றத்தை எட்டுவதற்கு திணைக்களத்திற்கு முடிந்துள்ளது. இறதற்காக அவ்வவ் நாற்று மேடைகளின் பங்களிப்பு வரைபு மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

வரைபு இலக்கம் iii

**அரசாங்கத்தின் நாற்று மேடைகளில் கன்று உற்பத்தி**



இங்கு 2020 ஆம் உயரிய கன்று உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு இருப்பது வெலிகடமுல்ல மற்றும் குபுக்கன நாற்றுமேடைகளின் மூலமாகும். இவ்விரு நாற்று மேடைகளும் மொத்த இறப்பர் உற்பத்தியிற்கு 552,437 கன்றுகளை சேர்த்து 54% பங்களிப்பினை வழங்க முடிந்துள்ளது. அரசாங்கத்தின் கன்று நாற்று மேடைகளின் கன்று உற்பத்தி இலக்கினை எட்டுவதற்காக ஒதுக்கப்பட் ரூபா 132 மில்லியனினால் ரூபா 123.7 மில்லியன் செலவிட்டு 94% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. முன்னைய ஒரு சில ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் கன்று நாற்றுமேடைகளில் வருடாந்த கன்று உற்பத்தி கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | கன்று உற்பத்தி |
|---|---|
| **2015** | 1,386,593 |
| **2016** | 1,204,748 |
| **2017** | 946,805 |
| **2018** | 1,327,180 |
| **2019** | 1,454,004 |
| **2020** | 1,026,899 |

**அட்டவணை இலக்கம் XIII**

புள்ளிவிபர எண்ணிக்கைக்கு அமைய 2015 ஆண்டு தொடக்கம் 2017 ஆண்டு வரை கன்று உற்பத்தி முறையாக வீழ்ச்சியடைந்து காண முடிவதுடன் 2018 தொடக்கம் 2019 ஆண்டு வரை கன்று உற்பத்தியில் வளர்ச்சி காணபிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2019 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட புள்ளிவிபர எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 2020 ஆம் ஆண்டில் கன்று உற்பத்தியுடன் வீழ்ச்சியடைந்துள்ளது. இக் குறைவு 427,105 இறப்பர் கன்றுகளாகும்.

### 2.3.2. கன்று உற்பத்தி – தனியார் நாற்று மேடை

கன்று தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்படும் அரசாங்கத்தின் நாற்று மேடைகளுக்கு மேலதிகமாக தனியார் கன்று நாற்று மேடைகளும் தாபிக்கப்பட்டுள்ளன. தனியார் நாற்றுமேடைகள் திணைக்களத்தின் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகமாக தனியார் நாற்றுமேடைகளில் கன்று உற்பத்தி கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**கன்று உற்பத்தி - 2020 (தனியார் நாற்றுமேடை)**

| பிரதேச அலுவலகம் | கன்று உற்பத்தி |
|---|---|
| கேகாலை | 174,640 |
| மொணராகலை | 27,277 |
| இரத்தினபுரி | 139,950 |
| களுத்துரை | 7,788 |
| காலி | 13,500 |
| மொத்தம் | **363,155** |

**அட்டவணை இலக்கம் XIV**

மேற்கூறப்பட்ட அட்டவணைக்கு அமைய 2020 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் கன்று உற்பத்தியில் உயரிய கன்று உற்பத்தி பதிவு செய்யப்பட்டு இருப்பது கேகாலை பிராந்திய அலுவலகப் பிரதேசத்திலாகும். கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தனியார் துறையின் மொத்த இறப்பர் கன்று உற்பத்திக்காக 87% பங்களிப்பு கிடைத்துள்ளது.

## 2.4. மழைக்கவசங்களை இடும் வேலைத்திட்டம்

இலங்கையில் இறப்பர் செய்கை ஆரம்பிக்கப்பட்ட முதல் காலப்பகுதி தொடக்கம் மழை, இறப்பர் பால் அறுவடையினைப் பெற்றுக் கொள்வதற்கு (பால் வெட்டுதல்) தடையான காரணியாக மாற்றம் பெற்றுள்ளது. மழைக் காலங்களில் இறப்பர் பால் வீணாகுவதனை தடுத்தல் மற்றும் மழையற்ற காலப்பகுதியைப் போன்று மழையுடன் கூடிய காலப் பகுதியிலும் தொடர்ச்சியாக இறப்பர் பால் அறுவடையினைப் பெற்றுக் கொள்வதற்காக மழைக் கவசங்களை இடுதல் ஆகிய புதிய தொழில்நுட்ப முறைகள் இலங்கை இறப்பர் ஆராய்ச்சியின் மூலம் இறப்பர் செய்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மழைக்கவசங்களை இடுவதன் மூலம் மழை காரணமாக பால் வெட்ட முடியாத தினங்களிலும் பால் வெட்டுவதன் மூலம் இறப்பர் விவசாயிகளுக்கு வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள முடிகின்றமை விஷேட பயனாகும். மழைக் கவசங்களை இடுவதன் மூலம் இறப்பர் செய்கையாளர்களுக்கு இடையே பிரபல்யப்படுத்துவதற்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் மானிய உதவி நிதி காணி உரிரமையாளாக்ளுக்கு வழங்கப்படுகின்றது. வெற்றிகரமாக மழைக் கவசங்கள் இடப்பட்டுள்ள சிறு தோட்ட உரிமையாளர்களின் ஒரு இறப்பர் மரத்திற்கு ரூபா 70/- வீதம் மானிய உதவி நிதி சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்காக ஒரு மரத்திற்கு ரூபா 35/- நிதி பெருந்தோட்ட கம்பனிக்கும் செலுத்தப்படுகின்றது. சம்பிரதாய பிரதேசங்களில், ஆண்டு பூராகவும் காணப்படும் மழை காரணமாக இவ் வேலைத்திட்டம் அமுலபடுத்தப்படுகின்றது.



**மழைக் கவசம் இடப்பட்ட இறப்பர் செய்கை**

**2020** ஆண்டில் சிறு தோட்டப் பிரிவிற்கு உரிய மழைக்கவசங்களை இடுவது தொடர்பான தகல்களுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| மாவட்டம் | மழைக்கவசம் இடப்பட்ட நிலப்பரப்பு அளவு – சிறு தோட்டம் (ஹெக்டயர்) | மழைக்கவசம் இடப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| களுத்துரை | 166.58 | 128 |
| கேகாலை | 217.36 | 170 |
| கம்பஹா | 68.15 | 27 |
| குருநாகல | 41.87 | 26 |
| கண்டி | 5.25 | 14 |
| மாத்தளை | 2.53 | 02 |
| இரத்தினபுரி | 192.74 | 160 |
| கொழும்பு | 78.48 | 41 |
| காலி | 60.40 | 51 |
| மாத்தரை | 98.45 | 82 |
| ஹம்பாந்தோட்டடை | 9.89 | 12 |
| **மொத்தம்** | **941.70** | **713** |

**அட்டவணை இலக்கம் XV**

2020 ஆம் ஆண்டில் மழைக்கவசங்களை இடும் வேலைத்திட்டத்தின் கீழ் சிறு தேயிலைத் தோட்டத்திற்காக 713 விவசாயிகளினால் 941.70 ஹெக்டயர் மழைக்கவசம் இடப்பட்டது. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் இதற்காக மானிய உதவியாக ரூபா 38.02 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இவ் ஆண்டில் சிறு தோட்ட பிரிவின் மழைக் கவசங்களை இடும் மாவட்ட ரீதியில் கீழ் குறிப்பிடப்பட்ட வரைபடக் குறிப்பின் மூலம் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

**வரைபட இலக்கம் iv**

**மாவட்ட ரீதியில் மழைக்கவசங்கள் இடப்பட்ட நிலப்பரப்பு அளவு - 2020 (சிறு தோட்டம்)**



இதன் போது உறுதிப்படுத்தப்படுவது 2020 ஆண்டில் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட மழைக் கவசங்களை இடும் வேலைத்திட்டத்தின் கீழ் சிறு தோட்டப் பிரிவினால் ஏனைய மாவட்டங்களுக்கு அப்பால் கேகாலை மாவட்டத்தில் உயரிய முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தில் மழைக் கவசங்கள் இடப்பட்ட நிலப்பரப்பின் அளவு 217.36 ஹெக்கடயராகும்.

பெருந்தோட்ட கம்பனியினால் 2020 ஆண்டில் இறப்பர் செய்கைக்காக மழைக் கவசங்களை இடுவது தொடர்பான தகல்கள் கீழ் உள்ள அட்டவணை மூலம் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | மழைக்க வசம் இடப்பட்ட நிலப்பரப்பு அளவு பெருந்தோட்டக் கம்பனி (ஹெக்டயர்) | மழைக்கவசம் இடப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **களுத்துறை** | 1,706.61 | **04** |
| **கேகாலை** | 1,583.01 | **30** |
| **குருநாகலை** | 378.97 | **04** |
| **கண்டி** | 20.00 | **03** |
| **இரத்தினபுரி** | 1,366.83 | **18** |
| **கொழும்பு** | 610.16 | **06** |
| **காலி** | 183.01 | **07** |
| **மாத்தரை** | 98.18 | **02** |
| **மொத்தம்** | **5,946.77** | **74** |

**அட்டவணை இலக்கம் XVI**

இதற்கு அமைய 2020 ஆம் ஆண்டில் பெருந்தோட்டக் கம்பனிகளில் 74 தோட்டங்கள் மூலம் 5,946.77 ஹெக்டயர் நிலப்பரப்பு அளவு மழைக் கவசம் இடப்பட்டுள்ளதுடன் அதற்காக செலவிடப்பட்ட நிதி ரூபா 50.94 மில்லியன் ஆகும்.

பெருந்தோட்ட கம்பனி பிரிவின் மழைக்கவசங்களை இடும் வேலைத்திட்டத்தின் கீழ் ஏனைய மாவட்டங்களைவிட களுத்துறை மாவட்டத்தில் அதி கூடுதலான மழைக் கவசங்கள் இடப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுடன் அந் நிலப்பரப்பு அளவு 1,706.61 ஹெக்டராகும். வருடாந்தம் மழைக் கவசங்களை இடும் முன்னேற்றத்தை கீழ் குறிப்பிடப்பட்டவாறு அடையாளம் காண முடிகின்றது.

**மழைக் கவசங்களை இடல் 2015 - 2020**

| ஆண்டு | சிறு தோட்ட நிலப்பரப்பு (ஹெக்) | பெருந்தோட்ட கம்பனி நிலப்பரப்பு அளவு (ஹெக்) |
|---|---|---|
| 2015 | 478.58 | 3,778.29 |
| 2016 | 182.65 | 2,452.52 |
| 2017 | 258.88 | 1,072.79 |
| 2018 | 323.71 | 1,071.32 |
| 2019 | 434.43 | 2,454.94 |
| **2020** | **941.70** | **5,946.77** |

அட்டவணை இலக்கம் XVII

இதற்கு அமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2020 ஆண்டில் மழைக்கவசங்களை இடும் அளவில் துரித வளர்ச்சி இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. மழைக்கவசங்களை இடுவது தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்தல் மற்றும் ஆண்டு பூராகவும் இறப்பர் அறுவடையினை பெற்றுக் கொள்ள முடிவதன் மூலம் அவர்ளுக்கு உயரிய பெறுபேறுகளை எட்ட முடிகின்றமை அதற்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது.

### 2.5. பால் வெட்டும் திறன்பயிற்சி வேலைத்திட்டம்

#### i. பால் வெட்டும் திறன் பயிற்சியினைப் பெற்றுக் கொள்ளளல் (பொதுவான)

நீண்காலமாக அதிகூடுதலான அறுவடையினைப் பெற்றுக்கொள்வதாயின் சரியான திறன் முறைகளை பின்பற்றி பால் வெட்டப்பட வேண்டும். இதற்காக விவசாய பயிற்றுவித்தல் திணைக்களத்தினால் மேறகொள்ளப்படுகின்றது. சுய தொழில்வாய்ப்புக்களுக்கான சந்தர்பத்தை ஏற்படுத்தல், இறப்பர் மரத்திற்கு சேதங்கள் ஏற்படாதவாறு நீண்டகாலமாக கூடுதலான அறுவடையினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அறிவுறுத்தல் மற்றும் பால் அறுவடை உதவியாளர்களின் பற்றாக்குறைக்கு தீர்வினைக் அடையாளம் காண்பதற்கு இவ் வேலைத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.



**பால் வெட்டும் திறன் பயிற்சி வேலைத்திட்டங்கள்**

பால் வெட்டும் திறன் பயிற்சி பொதுவான மற்றும் தொழில்சார் அடிப்படையில் இரண்டு பரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. பால் வெட்டும் திறன் பொதுவான பயிற்சியின் கீழ் இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்காக தமது செய்கையினை முன்னெடப்பதாயின் அதன் பயன்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு தமக்கு இயலுமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், தொழில்சார் மட்டத்தில் அப் பணிகளில் ஈபடுவற்கும் இவ் வேலைத்திட்டம் நடாத்தப்படுவதுடன் பயிற்சி பெறுவோருக்காக இறப்பர் கைத்தொழில்சாந்த பொருளாதார, சூழல் மற்றும் சமூக முக்கியத்துவம், மரங்களை தேர்ந்தெடுத்தல், இறப்பர் திசுக்களை அடையாளம் கானுதல், வெட்டக் கூடிய முறைகளை அடையாளம் கானுதல், இறப்பர் தயாரிப்பு தொடர்பான அறிவினைப் போன்று பால் வெட்டக் கூடிய கத்தியினை கூர்மையாக்குதல் போன்ற துறைகள் தொடர்பான பிரயோக அறிவு வழங்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் பால் வெட்டும் திறன் பொதுவான பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| பிரதேச அலுவலகம் | பால் வெட்டும் திறன் பயிற்சி வேலைத்திட்டம் (பொதுவான) | | | |
|---|---|---|---|---|
| | இலக்கு (நபர்கள்) | நடாத்தப்பட்ட வேலைத்திட்டத் தின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற எண்ணிக்கை | செலவிடப்ப ட்ட நிதி (ரூபா.மி) |
| களுத்துரை | 560 | 11 | 235 | 0.37 |
| கேகாலை | 920 | 37 | 741 | 1.18 |
| இரத்தினபுரி | 620 | 18 | 620 | 0.63 |
| மொணராகலை | 580 | 37 | 580 | 0.99 |
| காலி | 240 | 10 | 135 | 0.40 |
| **மொத்தம்** | **2,920** | **113** | **2,311** | **3.57** |

**அட்டவணை இலக்கம் XVIII**

2020 ஆண்டில் 2,920 பேர்களுக்காக பால் வெட்டும் தின் பொதுவான பயிற்சியினைப் பெற்றுக கொள்வதற்காக இலக்காகக் கொள்ளப்பட்ட பயிற்சியினை வழங்க முடிந்தது 2,311 பேர்களுக்கு மாத்திரம் என்பதுடன் அதன் மூலம் 79% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டத்திற்காக திணைக்களத்தினால் ரூபா 3.57 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பால் வெட்டும் திறன் பொதுவான பயிற்சி பிரதேச அலுவலக மட்டத்திலான இலக்கு எட்டப்பட்டு இருக்கும் முறைகள் கீழ் குறிப்பிடப்பட்ட வரைபுக் குறிப்பின் மூலம் தொடர்ந்தும் விவரிக்கப்பட்டுள்ளது.

வரைபு இலக்கம் **V.**

**பால் வெட்டும் திறன் பயிற்சியினை வழங்குதல் (பொதுவானது)**



இதற்கு அமைய இரத்தினபுரி மற்றும் மொணராகலை பிரதேச அலுவலகத்தின் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2020 ஆண்டில் கூடுதலான நபர்களுக்கு கேகாலை பிராந்திய அலுவலகத்தினால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### ii. பால் வெட்டும் திறன் பயிற்சியினை வழங்குதல் (தொழல்சார்)

தற்போது பால் வெட்டுவது தொடர்பாக பயிற்றுவித்தல் மற்றும் அனுபவம் கொண்ட பால் வெட்டுபவர்கள், பால் வெட்டுவது தொடர்பான பயிற்சிக்காக ஆர்வம் காண்பிக்கும் நபர்களுக்கு தொழிலசார் திறமைகளை வழங்கும் பால் வெட்டும் திறன் தொழில்சார் பயிற்சி மூலம் வழங்கப்படுகின்றது. இதன் போது இறப்பர் கைத்தொழில் தொடர்பாக மற்றும் அதன் பொருளாதார மற்றும் சுற்றாடல் முக்கியத்துவம், இறப்பர் மரத்தின் கட்டமைப்பு, இறப்பர் மரத்தின் பால் உற்பத்தி செயற்பாடுகள், இறப்பர் பாலின் உள்ளீடு, பால் வெட்டுவதனை ஆரம்பித்தல், மரத்திற்கு அடையாளம் இடுதல், இறப்பர் மரத்தின் திசு அமைப்பு, பால் வெட்டுவதற்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விருத்தி செய்யப்பட்ட பால் வெட்டும் கத்தியினை அறிமுகப்படுத்தல், முதிர்ச்சியற்ற இறப்பர் செய்கையினைத் தாபித்தல் மற்றும் செய்கை நிருவாகம், பசளைப் பயன்பாடு, ஏற்படக் கூடிய நோய்கள் மற்றும் கிரிமிநாசியினை அறிமுகப்படுத்தல் மற்றும் நிருவாகம், பால் வெட்டுவதற்காக பரிந்துரை செய்யப்பட்ட முறைகள், ஊக்கமளிக்கும் பயன்பாடுகள், ஊக்குவிப்புப் பயன்பாடுகள், பால் வெட்டும் பிரயோக பயிற்சி, பயிரின் தாவரவியல் விஞ்ஞான அடையாளங்கள் மற்றும் குலோன வகை, மழைக் கவசங்களைப் பயன்படுத்தல், இடைக்காலப் பயிர் மற்றும் தேனிக் கட்டுப்பாடு போன்றன தொடர்பாக விரிவான அறிவு வழங்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டிற்கு உரியதாக பால் வெட்டும் திறன் தொழில்சார் பயிற்சி வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| பிரதேச அலுவலகம் | பால் வெட்டும் திறன் பயிற்சி வேலைத்திட்டம் (தொழில்சார்) | | | |
|---|---|---|---|---|
| | இலக்கு (நபர்கள்) | நடாத்தப்பட்ட நிகழச்சியின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற எண்ணிக்கை | செலவிடப்பட்ட நிதி (ரூபா.மி) |
| களுத்துரை | 60 | 01 | 30 | 0.26 |
| கேகாலை | 60 | 02 | 60 | 0.13 |
| இரத்தினபுரி | 60 | 02 | 67 | 0.45 |
| மொணராகல | 60 | 01 | 30 | 0.25 |
| காலி | 60 | 01 | 25 | 0.25 |
| மொத்தம் | 300 | 07 | 212 | 1.34 |

**அட்டவணை இலக்கம் XIX**

திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கு உரியதாக 300 பேர்களுக்காக பால் வெட்டும் திறன்சார் தொழில் பயிற்சிப் பாடநெறியினை வழங்குவதற்கான இலக்கு எட்டப்பட்ட போதிலும் பயிற்சி வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 212 ஆகும். இப் பயிற்சி வேலைத்திட்டத்திற்காக ரூபா 1.34 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பிராந்திய அலுவலக மட்டத்தில் பால் வெட்டும் திறன் தொழில்சார் பயிற்சியின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கை கீழ் குறிப்பிடப்பட்ட வரைபடக் குறிப்பின் மூலம் சித்தரித்துக் காண்பிக்கப்படுள்ளது.

**வரைபட் இலக்கம் vi**

**பால் வெட்டும் கலைசார் பயிற்சியினை வழங்குதல் (தொழில்சார்)**




கடந்த ஒரு சில ஆண்டுகளுக்கு பால் வெட்டும் திறன்சார் பயிற்சி தகவல்கள் கீழே சமர்பிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | பொதுவாக பால் வெட்டும் திறன் பயிற்சி பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட எண்ணிக்கை | தொழில்சார் பால் வெட்டும் திறன் பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 2016 | 2,480 | 305 |
| 2017 | 2,903 | 287 |
| 2018 | 3,117 | 268 |
| 2019 | 3,997 | 300 |
| 2020 | 2,311 | 212 |

அட்டவணை இலக்கம் XX

கடந்த ஆண்டுகளுக்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் பால் வெட்டும் திறன்மிக்க பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மேற்கூறப்பட்ட அட்டவணை சான்றுபகர்கின்றது. காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலமைக்கு மத்தியில் பயிற்சி வேலைத்திட்டங்கள் இடம்பெறாமை இதற்கான பிரதான காரணமாகும்.

## 2.6. மாற்று இணைப்பு பயிற்சி வேலைத்திட்டங்கள்

உற்பத்தித்திறன் மிக்க உயர் தரத்தின் ஒட்டுப்பிடித்தலுக்காக இறப்பர் கன்று உற்பத்தி செய்வதற்கு பயிற்றுவிப்பது இவ் வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். கன்றுகளை நாட்டி ஐந்து ஆண்டு தொடக்கம் 30 ஆண்டுகள் வரை உயரிய அறுவடையினைப் பெற்றுக் கொள்ள முடிவது வெற்றிகரமான மாற்று இணைப்புக்கள் மூலம் மாத்தரம் என்பதுடன் அரசாங்கத்தின் கன்று நாற்று மேடைகளில் ஊழியர்கள், தனிநபர் கன்று நாற்று மேடை செயற்பாட்டாளர்கள் மற்றும் அதற்கு விண்ணப்பிப்பவர்களை பங்கேற்கச் செய்து மாற்று இணைப்பாளர் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டிற்கு உரியதாக இவ் வேலைத்திட்டம் தொடர்பான தகவல்கள் கீழ் உள்ள அட்டவணியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| பிரதேச அலுவலகம் | மாற்றுஇணைப்பு பயிற்சி | | |
|---|---|---|---|
| | இலக்கு (நபர்கள்) | பயிற்றுவிக்கப்பட்ட எண்ணிக்கை | செலவிடப்பட்ட நிதி (ரூபா.மி ) |
| களுத்துரை | 30 | 28 | 0.03 |
| கேகாலை | 60 | 68 | 0.05 |
| இரத்தினபுரி | 30 | 30 | 0.05 |
| மொணராகலை | 60 | 60 | 0.08 |
| காலி | 30 | 25 | 0.05 |
| **மொத்தம்** | **210** | **211** | **0.26** |

அட்டவணை இலக்கம் XXI

2020 ஆம் ஆண்டில் இலக்காகக் கொள்ளபட்ட பயிற்சிபெற்ற மாற்று இணைப்பாளர்களின் எண்ணிக்கை 210 என்பதுடன் அவ் இலக்கினை வெற்றிகரமாக எட்டுவதற்கு திணைக்களத்திற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இவ் வேலைத்திட்டத்திறக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 0.35 மில்லியனினால் ரூபா 0.26 மில்லினை செலவிட்டு 74% சதவீத நிதி முன்னேற்றத்தை எட்டுவதற்கு திணைக்களத்திற்கு முடிந்துள்ளது.

இதன் போது இலக்காக் கொள்ளப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கையினை எட்டுவதற்கு கேகாலை, இரத்தினபுரி மற்றும் மொணராகலை பிராந்திய அலுவலகங்களுக்கு முடிந்ததுடன் கூடுதலான எண்ணிக்கையினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு இருப்பது கேகாலை பிரதேச அலுவலகத்தின் மூலமாகும்.

## 2.7. மழைக் கவசங்களை இடுவதற்கு பயிற்சயளிக்கும் வேலைத்திட்டம்

மழைக் கவசங்களை இடுதல் என்பது திருத்தியமைக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் என்பதுடன் அது உரியவாறு இடம்பெறாத பட்சத்தில் இறப்பர் மரங்கள் அழிவடைவதனால் அதன் உற்பத்தித் திறனைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாத பிரச்சினையினையினை எதிர்கொள்ள வேண்டிய நிலமை விவசாயிகளுககு ஏற்படும். அவ்வாறான நிலமைக்கு பிரதான காரணமாக அமைந்திருப்பது மழைக் கவசங்களை இடுவதற்காக தேவையான அறிவு அற்றவர்களினால் உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமையாகும். இதற்கு அமைய இறப்பர் செய்கைக்காக சரியாக மற்றும் வெற்றிகரமாக மழைக் கவசங்களை இடுவதன் மூலம் உயரிய பயன்களைப் பெற்றுக் கொள்வதனை பிரதான நோக்கமாகக் கொண்டு இப் பயிற்சி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. உரிய ஆண்டுக்குள் மழைக் கவசங்களை இடும் பயிற்சி செயற்பாடுகளை 510 பேர்களுக்காக வழங்குவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டதுடன் அவர்களில் 1231 பேர்களுக்காக பயிற்சியினை வழங்கும் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

| பிராந்திய அலுவலகங்கள் | இலக்கு (நபர்கள்) | பயிற்றுவிக்கப்பட்ட எண்ணிக்கை | செலவிடப்பட்ட நிதி (ரூபா.மி) |
|---|---|---|---|
| கேகாலை | 270 | 245 | **0.15** |
| களுத்துரை | 120 | 139 | **0.09** |
| இரத்தினபுரி | 90 | 134 | **0.10** |
| காலி | **30** | **713** | 0.001 |
| **மொத்தம்** | **510** | **1231** | **0.341** |

அட்டவணை இலக்கம் XXII

அட்டவணைக்கு அமைய இறப்பர் துறையின் முன்னேற்றத்திற்காக அமுல்படுத்தப்பட்ட மழைக்கவசங்களை இடுவதற்கு பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பிராந்திய அலுவலகங்களில் காலி பிராந்திய அலுவலககத்தினால் 713 பேர்களுக்காக பயிற்சியினை வழங்கி உயரிய முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக,

- ❖ மனைசாந்த இறப்பர் பொருள் உற்பத்திப் பயிற்சி.
- ❖ மண் வளப்படுத்தும் பயிற்சிகள்
- ❖ முதிர்ச்சியற்ற மற்றும் முதிர்ந்த செய்கை பராமரிப்புப் பயிற்சி.
- ❖ புகை இல்ல நிர்மாணிப்பு.
- ❖ பால் வெட்டுவது தொடர்பில் இருநாள் செயலமர்வு.
- ❖ இறப்பர் செய்கை தொடர்பாக அறிவுறுத்தும் ஒருநாள் செயலமர்வு.
- ❖ விவசாயபண்ணை அலகு அபிவிருத்தி.
- ❖ தேனி கட்டுப்பாடு தொடர்பான பயிற்சி.
- ❖ மாதிரி விவசாயப் பண்ணை அலகினை ஏற்படுத்தல்.
- ❖ இறப்பர் சீட் உற்பத்தி பயிற்சி.
- ❖ இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான ஒரு நாள் செயலமர்வு.

ஆகிய பயிற்சி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் இதில் உயரிய பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கை பயிற்றுவிக்கப்பட்டு இருப்பது இறப்பர் சீட் உற்பத்தி பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் மூலமாகும். இதன் மூலம் பயிற்றுவிக்கப்பட்ட எண்ணிக்கை 255 ஆகும்.

## 2.8. இடைக்காலப் பயிற் செய்கை செயற்பாடுகள்



இடைக்கால பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்ட
இறப்பர் காணி

இறப்பர் செய்கையில் முதிர்ச்சியற்ற சந்தர்பங்களில் மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதன் மூலம் செய்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை தொடர்ந்தும் தரம் உயர்த்துவதற்காக இடைக்காலப் பயிற்ச் செய்கையினை அறிமுகப்படுத்துவது நோக்கமாகும். உற்பதித்திறன் மற்றும் வினைத்திறன் மிக்கதாக நிலப் பயன்பாட்டினை மேம்படுத்தல், இறப்பர் செய்கையில் பல்வேறுபட்ட வகையின் புல் செடிகொடிகள் இறப்பர் மரத்தின் வளர்ச்சிக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் அவற்றை அழித்தல், இயற்கை வளங்கள் மற்றும் ஏனைய உள்ளீடுகளின் வினைத்திறனைப் பயன்படுத்தல் (சூரிய ஒளி, பசளை, நீர்ப் பயன்பாடு, மரத்தின் வளர்ச்சி, ஊழியம்) மற்றும் ஒரே தடவையில் அனைத்து பயிர்களும் அழிவடையாமையினால் செய்கையாளர்களின் உறுதிப்பாட்டிற்கு அது சிறந்த முறையில் அழுத்தங்கள் போன்ற நேர்மனப்பாங்கு மிக்க காரணிகள் இடைக்காலப் பயிற்செய்கை மூலம் இறப்பர் செய்கையாளர்களுக்கு பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதன் கீழ் அண்ணாசி, வாழைப்பழம், பேசன்புருட், மற்றும் பப்பாசி போன்ற சம்பிரதாய பிரதேசங்ளுக்காகவும் கோகோவா, வாழைப்பழம், பப்பாசி சம்பிரதாயம் அல்லாத பிரதேசங்களுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் சமீபகாலத்தில் இஞ்சி செய்கை உட்பட போக செய்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தில் பரிந்துரை செய்யப்பட்ட முறைக்கு வெற்றிகரமாக செய்கை மேற்கொள்ளப்பட்ட இடைக்கால பயிர் உள்ளிட்ட இறப்பர் செய்கைக்காக ஒரு ஏக்கருக்கு ரூபா 4,000/- மானிய உதவி செலுத்தப்படுகின்றது.

| மாவட்டம் | செயகை மேற்கொள்ப்பட்ட பயிற்செய்கை | செய்கை மேற்கொள்ப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்டயர்) | செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| களுத்துரை | அண்ணாசி | 13.46 | 16 |
| | மறக்கரி | 2.65 | 5 |
| | வாழைப்பழம் | 8.57 | 12 |
| கேகாலை | அண்ணாசி | 26.16 | 33 |
| | வாழைப்பழம் | 9.92 | 19 |
| கம்பஹ | அண்ணாசி | 2.72 | 3 |
| குருநாகலை | மரக்கரி | 0.40 | 1 |
| வவுனியா | உளுந்து / கவ்பி | 1.21 | 2 |

| | | | |
|---|---|---|---|
| கண்டி | வாழை | 2.65 | 6 |
| இரத்தினபுரி | அண்ணாசி | 29.66 | 21 |
| | வாழைப்பழம் | 6.36 | 11 |
| | மறக்கரி மற்றும் போக செய்கை | 1.75 | 3 |
| கொழும்பு | அண்ணாசி | 32.03 | 32 |
| | வாழை | 1.56 | 2 |
| | மறக்கரி மற்றும் போக செய்கை | 0.25 | - |
| காலி | அண்ணாசி | 0.40 | 01 |
| | வாழை | 1.01 | 01 |
| மாத்திரம் | வாழை | 0.49 | 03 |
| ஹம்பாந்தோட்டடை | வாழை | 0.81 | 01 |
| | பயறு | 0.40 | 01 |
| மொணராகலை | வாழை | 19.06 | 19 |
| | தோட்டப் பயிர் | 22.67 | 34 |
| | மிளகாய் | 0.40 | 01 |
| | கொகோவா | 0.81 | 01 |
| பதுளை | வாழை | 1.21 | 01 |
| | தோட்ட செய்கை | 4.66 | 08 |
| **மொத்தம்** | | **191.27** | **237** |

**அட்டவணை இலக்கம் XXIII**

2020 ஆம் ஆண்டில் இடைக்காலப் பயிர் வேலைத்திட்டத்தின் கீழ் 191.27 ஹெக்டயர் இடைக்காலப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இலக்காகக் கொள்ளப்படட நிலப்பரப்பு அளவு 300 ஹெக்டயராகும். அதாவது இவ் ஆண்டில் இடைக்காலப் பயிற்செய்கை மூலம் 64% பௌதீக முன்னேற்றங்களை எட்டுவதற்கு திணைக்களத்திற்கு முடிந்துள்ளது. அத்துடன் பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்களில் அண்ணாசி செய்கைக்காக விவசாயிகள் முன்னுரிமை வழங்கியுள்ளதுடன் 104.43 ஹெக்கடயர் அண்ணாசி செய்கையினை மேற்கொண்டு மொத்த இடைக்கால பயிற்செய்கைக்காக **55%** பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இடைக்கால பயிற்செய்கைக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2.08 மில்லியன் ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 1.31 மில்லியன் செலவிட்டு 63% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் 237 இறப்பர் செய்கையாளர்களினால் இடைக்கால பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்காக உயரிய ஆர்வம் காண்பிக்கப்படுவது மொணராகலை மாவட்டத்தில் ஆகும்.

வரைபடக் குறிப்பு இலக்கம் vii

**பயிர்செய்கைக்கு அமைய இடைக்கால செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு – 2020**

**(ஹெக்டயர்)**




## 2.9. இயற்கை இறப்பர் கைத்தொழில்சார்ந்த தகவல்கள் - 2020

### 2.9.1 இறப்பர் செய்கை நிலப்பரப்பின் அளவு

2020 ஆம் ஆண்டில் நாட்டில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட மொத்த இறப்பர் செய்கை நிலப்பரப்பு அளவு 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இறப்பர் காணி புள்ளிவிபரங்களின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**இறப்பர் காணி அளவு (2010 – 2020)**

| ஆண்டு | மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்.) | | |
|---|---|---|---|
| | தனியார் பிரிவின் (ஹெக்டயர் 20 விட குறைந்த காணி) | தனியார் பெருந்தோட்ட கம்பனி (ஹெக்டயர் 20 இனை விட கூடிய காணி) | மொத்தம் |
| **2010** (இறப்பர் காணி புள்ளிவிபரத்தின் மூலம் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு அளவு) | 79,395 | 46,250 | 125,645 |
| 2011 | 80,018 | 48,516 | 128,534 |
| 2012 | 82,170 | 48,610 | 130,780 |
| 2013 | 86,529 | 47,821 | 134,350 |
| 2014 | 87,735 | 47,975 | 135,710 |
| 2015 | 89,429 | 46,991 | 136,420 |
| 2016 | 87,862 | 48,278 | 136,140 |
| 2017 | 88,412 | 48,213 | 136,625 |
| 2018 | 89,243 | 47,863 | 137,106 |
| 2019 | 90,195 | 47,413 | 137,608 |
| 2020 | 89,592 | 48,242 | 137,834 |

**அட்டவணை இலக்கம் XXIV**

கடந்த சில ஆண்டுகளுக்குள் இறப்பர் நிலப்பரப்பின் அளவு கிரமமாக அதிகரித்திருப்பதைக் காண்பிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிரதான காரணமாக அமைந்திருப்பது வருடாந்த இறப்பர் செய்கை மூலம் விலகிச் செல்லும் நிலப்பரப்பின் அளவினைவிட இறப்பர் புதிய செய்கை நிலப்பரப்பு அளவு சேர்த்துக் கொள்ளப்பட்டதாகும். 2020 ஆம் ஆண்டிற்கு உரியதாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு அளவில் 66% சிறிய மற்றும் நடுத்தர காணி துண்டுகளாகவும் எஞ்சியது 34% அளவு பெருந்தோட்ட கம்பனியின் தோட்டப் பிரிவாக காணப்படுகின்றது. இம் மொத்த காணி அளவில் முதிர்ச்சியடையாத காணியின் அளவு 17,305 ஹெக்டயரும் முதிர்சியடைந்த நிலப்பரப்பு அளவு 120,529 ஹெக்கடயராக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆண்டில் ஒரு ஹெக்டயர் இறப்பருக்காக சாதாரணமாக வருடாந்த அறுவடை 649 உலர் இறப்பர் கிலோ கிராமாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.9.2. இறப்பத் உற்பத்தி

2020 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்தி 78,205 மெட்ரித் தொன் ஆகும். 2019 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்தியான 74,753 மெட்ரிக் தொன்னிற்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்தி 4% ஆக வளர்ச்சியைக் காண்பிக்கின்றது. முன்னைய ஆண்டில் குறைவான பெறுமதியைக் காண்பித்த இறப்பர் விலை 2020 ஆம் ஆண்டில் அதிகரித்தமை இறப்பர் உற்பத்தியின் வளர்ச்சிக்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணியாகும்.

**இயற்கை இறப்பர் உற்பத்தி (மெட்ரிக் தொன்) 2012 – 2020**

| ஆண்டு | இயற்கை இறப்பர் உற்பத்தி (மெட்ரிக் தொன்) |
|---|---|
| 2012 | 152,050 |
| 2013 | 130,421 |
| 2014 | 98,573 |
| 2015 | 88,567 |
| 2016 | 79,100 |
| 2017 | 83,070 |
| 2018 | 82,560 |
| 2019 | 74,753 |
| 2020 | 78,205 |

அட்டவணை இலக்கம் XXV

ஒரு சில ஆண்டுகளுக்குள் மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட வரைபடத்தின் மூலம் மேலதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

**வரைபட viii** **இறப்பர் உற்பத்தி - 2020**



கீழ் குறிப்பிடப்பட்ட வரைபடத்திற்கு அமைய கடந்த ஆண்டிற்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்தி அதிகரித்த போதிலும் 2012 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இறப்பர் உற்பத்தி குறைவடைந்துள்ளது. இதற்காக இறப்பர் விலை குறைவடைவது பிரதானமாக தாக்கம் செலுத்தியுள்ளது.

**உலக இறப்பர் உற்பத்தி - 2020**

**(அயிரம் மெட்ரிக்தொன்)**

| நாடு | இறப்பர் உற்பத்தி 2019 | இறப்பர் உற்பத்தி 2020 |
|---|---|---|
| தாய்லாந்து | 4,852.00 | 4,335.20 |
| இந்தோநேசியா | 3,301.00 | 2,884.60 |
| வியட்நாம் | 1,173.00 | 1,235.00 |
| சீனா | 812.00 | 692.70 |
| ஐவரி கோஸ்ட் | 700.00 | 855.00 |
| இந்தியா | 702.00 | 679.00 |
| மலேசியா | 650.00 | 510.00 |
| காம்போஜ்ய | 288.00 | 349.30 |
| மியன்மார் | 305.00 | 263.30 |
| பிரேசில் | 185.00 | 192.00 |
| லாஓசய | 130.00 | 129.20 |
| பிலிபைன் | 115.00 | 103.60 |
| கேதமாலா | 102.00 | 104.80 |
| இலங்கை | 75.00 | 78.20 |
| ஏனைய நாடுகள் | 25.00 | 373.30 |
| உலக உற்பத்தி | 13,415.00 | 15,785.00 |

**அட்டவணை இலக்கம் XXVI**

### 2.9.3. இறப்பர் உற்பத்தி செலவினம்

**இறப்பர் உற்பத்தி செலவினம் 2007 – 2020 (1 கிலோ.கி. / ரூபா)**

| ஆண்டு | பெருந்தோட்ட கம்பனி | சிறு தோட்டப் பிரிவு |
|---|---|---|
| 2007 | 102.31 | 112.69 |
| 2008 | 119.89 | 114.00 |
| 2009 | 135.83 | 118.56 |
| 2010 | 158.94 | 119.83 |
| 2011 | 188.23 | 129.56 |
| 2012 | 207.00 | 136.00 |
| 2013 | 245.00 | 150.00 |
| 2014 | 280.00 | 160.00 |

| | | |
|---|---|---|
| 2015 | 285.00 | 170.00 |
| 2016 | 286.41 | 180.00 |
| 2017 | 290.00 | 195.00 |
| 2018 | 300.00 | 205.00 |
| 2019 | 301.50 | 210.00 |
| 2020 | 349.55 | 213.50 |

**அட்டணை இலக்கம் XXVII**

2020 ஆம் ஆண்டில் ஒரு கிலோ உலர் இறப்பர் உற்பத்திக்காக சிறு தோயிலைத் தோட்டப் பிரிவினால் உற்பத்தி செலவினத்தின் சராசரி ரூபா 213.50 என்பதுடன் அது முன்னைய ஆண்டில் அதன் பெறுமதி ரூபா 210.00 ஆகும். அத்துடன் பொருந்தோட்டக் கம்பனிக்கான உற்பத்திச் செலவினம் ரூபா 349.55 என்பதுடன், 2019 ஆம் ஆண்டில் உற்பத்திச் செலவினம் ரூபா 301.50 ஆகும். இதற்கமைய முன்னைய ஆண்டிற்கு இணைவாக இவ் ஆண்டில் உற்பத்திச் செலவினம் சிறு தோட்ட பிரிவின் ரூபா 3.50 இனாலும் தோட்டப் பிரிவின் ரூபா 48.05 இனால் அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது. 2007 ஆம் தொடக்கம் 2020 ஆண்டு வரை வருடாந்த உற்பத்திச் செலவினத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் அதற்கான அறுவடை குறைவடைதல், ஊழியத்திற்காக செலவாகும் நிதி அதிகரித்தல் மற்றும் உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு போன்ற காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன. உற்பத்தி செலவினம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் மாற்றமடையக் கூடியவாறு கீழ் குறிப்பிட்டபட்ட வரைபின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

**வரைபட இலக்கம் ix**

**இறப்பர் உற்பத்திச் செலவினம் 2007 – 2020 (1 கிலோகிராம் / ரூபா)**



### 2.9.4. உள்நாட்டு இறப்பர் நுகர்வு – 2020

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை இறப்பர் கடந்த காலம் தொடக்கம் ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்ட முன்னனி தொழில்நுட்ப மூலப்பொருளாக காணப்பட்ட போதிலும், தற்போது அந் நிலமை ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டு பொருள் உற்பத்திக்கான மூலப்பொருளாக காணப்படுவதுடன் உள்நாட்டு முடிவுப் பொருள் உற்பத்திக்காக கூடுதலாக இறப்பர் பயன்படுத்தப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டிலும் இயற்கை இறப்பர் 112,080 மெட்ரிக் தொன் பயன்பாடு நாட்டில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதாவது இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் உள்நாட்டு நுகர்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

| மாதம் | உள்நாட்டு நுகர்வு (மெட்ரிக் தொன்) |
|---|---|
| ஜனவரி | 11,978 |
| பெப்ரவரி | 10,885 |
| மார்ச் | 11,785 |
| ஏப்ரல் | 5,900 |
| மே | 8,545 |
| ஜூன் | 8,707 |
| ஜூலை | 8,789 |
| ஆகஸ்ட் | 8,662 |
| செப்டம்பர் | 10,550 |
| ஒக்டோபர் | 9,702 |
| நவம்பர் | 7,998 |
| டிசம்பர் | 8,579 |
| **மொத்தம்** | **112,080** |

**அட்டவணை இலக்கம் XXVIII**

**உள்நாட்டு இறப்பர் நுகர்வு (2015 – 2020)**

| ஆண்டு | (மெ.தொ.) |
|---|---|
| 2015 | 127,564 |
| 2016 | 141,940 |
| 2017 | 128,142 |
| 2018 | 135,238 |
| 2019 | 112,556 |
| 2020 | 112,080 |

**அட்டவணை இலக்கம் XXIX**

### 2.9.5. இறப்பர் ஏற்றுமதி

**2019 மற்றும் 2020 ஆண்டின் ஏற்றுமதி செய்யப்பட்ட இயற்கை இறப்பர் அளவுகள்**

| மாதம் | ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு (மெட்ரிக் தொன்) | |
|---|---|---|
| | 2019 | 2020 |
| ஜனவரி | 1,560 | 1,361 |
| பெப்ரவரி | 1,349 | 1,634 |
| மார்ச் | 1,978 | 725 |
| ஏப்ரல் | 1,507 | 705 |
| மே | 1,329 | 948 |
| ஜூன் | 854 | 1,533 |
| ஜூலை | 875 | 1,773 |
| ஆகஸ்ட் | 788 | 846 |
| செப்டம்பர் | 737 | 1,130 |
| ஒக்டோபர் | 604 | 1,271 |
| நவம்பர் | 568 | 1,671 |
| டிசம்பர் | 854 | 2,169 |
| **மொத்தம்** | **13,003** | **15,766** |

அட்டவணை இலக்கம் XXX

முன்னைய ஆண்டிற்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதியில் இயற்கை இறப்பர் அளவில் வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. உள்நாட்டு இறப்பர் உற்பத்தி அதிகரிப்பு இதற்கு தாக்கம் செலுத்தும் காரணியாக அமைந்துள்ளதுடன் இறப்பர் விலை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளமையினால் விவசாயிகள் இறப்பர் செய்கையின் மீது கூடுதலாக ஆர்வம் காண்பிப்பதற்கு காரணியாக அமைந்துள்ளது.

**மொத்த இறப்பர் ஏற்றுமதி மற்றும் ஏற்றுமதி வருமானம் - 2020**

| வகை | ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு | ஏற்றுமதி வருமானம் (ரூபா.மி.) |
|---|---|---|
| இயற்கை இறப்பர் (கிலோ.கிராம்) | 15,765,886 | 5,579 |
| செயற்கை இறப்பர் (கிலோ.கிராம்) | 5,492 | 1 |
| பகுதியளவு பூர்த்தி செய்த இறப்பர் (கி. கிராம்) | 5,134,000 | 531 |
| முடிவுப் பொருள் (கி.கிராம்) | 66,832,854 | 66,577 |
| முடிவுப் பெர்ருள் (அலகு) | 30,193,777 | 78,392 |
| மொத்த இறப்பர் ஏற்றுமதி அளவு (கிலோ.கிராம்) | 87,738,232 | 72,688 |

| | | |
|---|---|---|
| மொத்த இறப்பர் ஏற்றுமதி அளவு (அலகு) | 30,193,777 | 78,392 |
| மொத்தம் | | 151,080 |

**அட்டவணை இலக்கம் XXXI**

**இலங்கையில் இறப்பர் கொள்வனவு செய்யப்பட்ட பிரதான நாடுகள் 2020**

| நாடுகள் | கொள்வனவு செய்யப்பட்ட அளவு (மெ.தொ.) | % |
|---|---|---|
| **பகிஸ்தான்** | 5,948 | 37.70 |
| **மலேசியா** | 2,481 | 15.70 |
| **ஜப்பான்** | 1,294 | 8.20 |
| **ஜேர்மன்** | 865 | 5.50 |
| **சீனா** | 714 | 4.50 |
| **இதாலி** | 594 | 3.80 |
| **இந்தியா** | 435 | 2.80 |
| **வியட்நாம்** | 434 | 2.80 |
| **அமெரிக்கா** | 425 | 2.70 |
| **தென் ஆபிரிக்கா** | 366 | 2.30 |
| **ஏனைய நாடுகள்** | 2,210 | 14.00 |
| மொத்தம் | **15,766** | **100** |

**அட்டவணை இலக்கம் XXXII**

### 2.9.6. இறப்பர் இறக்குமதி

**இயற்கை இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் - 2020**

| மாதம் | ஏற்றுமதி அளவு (மெ.தொ.) | |
|---|---|---|
| | **2019** | **2020** |
| **ஜனவரி** | 3,307 | 5,831 |
| **பெப்ரவரி** | 3,633 | 6,618 |
| **மார்ச்** | 2,734 | 7,109 |
| **ஏப்பரல்** | 2,623 | 1,878 |
| **மே** | 5,693 | 3,203 |
| **ஜூன்** | 3,708 | 2,640 |
| **ஜூலை** | 4,163 | 3,999 |
| **ஆகஸ்ட்** | 4,950 | 4,583 |
| **செப்டம்பர்** | 4,184 | 4,176 |

| | | |
|---|---|---|
| **ஒக்டோபர்** | 5,778 | 3,714 |
| **நவம்பர்** | 5,422 | 2,049 |
| **டிசம்பர்** | 3,811 | 2,828 |
| மொத்தம் | **50,006** | **48,628** |

அட்டவணை இலக்கம் XXXIII

இலங்கையில் இறப்பர் சார்ந்த உற்பத்தி பாரியளவில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் விவசாயினைப் பாதுகாப்பதற்காக வரையறுக்கப்பட்டளவு இறப்பர் இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் இறக்குமதியினைக் குறைக்க முடிந்ததுடன் அது உள்நாட்டுப் பெருளாதாரத்தை வலுவூட்டும் செயற்பாடாகும்.

**வருடாந்தம் இயற்கை இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவு**

| ஆண்டு | இயற்கை அறப்பர் (மெ.தொ.) |
|---|---|
| **2012** | 15,675.60 |
| **2013** | 11,155.80 |
| **2014** | 29,225.00 |
| **2015** | 54,376.60 |
| **2016** | 72,984.90 |
| **2017** | 61,801.20 |
| **2018** | 65,759.00 |
| **2019** | 50,006.30 |
| **2020** | 48,628.00 |

**அட்டவணை இலக்கம் XXXIV**

**மொத்த இறப்பர் இறக்குமதி - 2020**

| வகை | நிறுவனம் மேற்கொண்ட அளவு | நிறுவனத்தின் செலவினம் (ரூபா.மி.) |
|---|---|---|
| இயற்கை இறப்பர் (கி.கிரா.) | 48,627,866 | 12,263 |
| செயற்கை இறப்பர் (கி. கிரா.) | 65,676,387 | 19,309 |
| பகுதியளவு பூர்த்தி செய்த இறப்பர் (கி. கிரா.) | 31,901,821 | 4,711 |
| முடிவுப்பொருட்கள் (கி. கிராம்) | 8,136,066 | 7,884 |

| | | |
|---|---|---|
| முடிவுப் பொருட்கள் (அலகு) | 3,470,246 | 8,064 |
| மொத்த இறப்பர் இறக்குமதி அளவு (கி. கிராம்) | 154,348,140 | 44,157 |
| மொத்த இறப்பர் இறக்குமதி அளவு (அலகு) | 3,470,246 | 8064 |
| **மொத்தம்** | | **52,231** |

**அட்டவணை இலக்கம் XXXV**

**நாடுகளுக்கு அமைய இயற்கை இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள்**

| நாடுகள் | இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் (மெ. தொ) | % |
|---|---|---|
| தாய்லாந்து | **17,374** | **35.73** |
| இந்தேநேசியா | **16,874** | **34.70** |
| வியட்நாம் | **11,089** | **22.80** |
| அய்வரிகொஸ்ட் | **999** | **2.05** |
| மியன்மார் | **733** | **1.51** |
| மலேசியா | **634** | **1.30** |
| சிங்கப்பூர் | **602** | **1.24** |
| தென்கொரியா | **120** | **0.25** |
| கோதமாலா | **101** | **0.21** |
| காம்போஜ் | **80** | **0.16** |
| ஏனைய நாடுகள் | **22** | **0.05** |
| **மொத்தம்** | **48,628** | **100.00** |

**அட்டவணை இலக்கம் XXXVI**

### 2.9.7. இறப்பர் விலை

**கொழும்பு இறப்பர் ஏல விற்னையின் வகைகளுக்கு அமைய வருடாந்த பொதுவான விலை (1 கிலோகிராம் ரூபாக்கள்)**

| ஆண்டு | வருடாந்த பொதுவான விலை | | |
|---|---|---|---|
| | சீட் இறப்பர் இலக்கம்.1 | ஸ்கிராப் குறூப் இலக்கம் .1.XBR | லேடெக்ஸ் குரோப் இலக்கம் .1x |
| **2019** | 288.48 | 245.05 | 302.26 |
| **2020** | 350.04 | 255.31 | 357.89 |

**அட்டவணை இலக்கம் XXXVII**

உலகளாவிய மொத்த தேசிய உற்பத்தியில் மந்தமான வளர்ச்சி காரணமாக இயற்கை இறப்பருக்கான கேள்வி குறைவடைந்துள்ளமையினால் 2011 ஆண்டு தொடக்கம் குறைவடைந்து காணப்பட்டுள்ள போதிலும் 2019 ஆண்டிற்கு இணைவாக 2020 ஆம் ஆண்டில் இறப்பர் விலையில் அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது.

## கொழும்பு இறப்பர் ஏலவிற்பனையில் இறப்பர் சாதாரண விலைகள் மாதாந்த அடிப்படையில் - 2020

| மாதம் | சீட் இறப்பர் (ஆர்.எஸ்.எஸ்.) | | | | | லேடெக்ஸ் கிறேப் | | | | | ஸ்கிரேப் கிரேப் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 1X | 1 | 2 | 3 | 4 | 1XBR | 2XBR | 3XBR | No.4 | F.B. | SKIM |
| ஜனவரி | 326.4 | 319.0 | 315.0 | 280.0 | 272.0 | 351.4 | 348.6 | 336.3 | 321.8 | 264.3 | 255.7 | 256.6 | 254.8 | 249.0 | 253.0 | 247.2 |
| பெப்பரவரி | 301.2 | ஓ.நா | 263.0 | 256.0 | 252.9 | 351.0 | 349.0 | 338.1 | 329.7 | 252.5 | 247.2 | 245.0 | 240.8 | 237.6 | 231.0 | 210.5 |
| மார்ச் | 300.0 | 288.0 | 273.0 | ஓ.நா | 249.7 | 350.3 | 352.2 | 350.3 | 346.2 | 245.1 | 242.5 | 232.0 | 238.1 | 230.0 | 224.3 | 207.5 |
| ஏப்ரல் | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | 330.6 | 333.0 | 301.5 | 275.7 | 211.1 | 201.0 | 200.0 | 190.5 | ஓ.நா | 195.0 | 191.5 |
| மே | ஓ. | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | 330.0 | 320.5 | 298.0 | 264.7 | 195.0 | 191.1 | 195.0 | 189.0 | 188.0 | 190.0 | 157.3 |
| ஜுன் | ஓ. | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | 300.0 | 297.0 | 271.0 | 252.6 | 199.0 | 193.5 | 191.3 | 192.5 | 189.8 | 181.0 | 184.1 |
| ஜுலை | ஓ.நா | 270.0 | ஓ.நா | 245.0 | 255.0 | 288.6 | 294.8 | 281.4 | 273.5 | 225.5 | 218.6 | 203.5 | 210.7 | 207.0 | 193.0 | 193.1 |
| ஆகஸ்ட் | ஓ.நா | 292.5 | 278.0 | 270.0 | 264.0 | 332.0 | 331.1 | 311.5 | 295.5 | 271.6 | 259.7 | 251.6 | 233.6 | 227.5 | 210.0 | 231.2 |
| செப் | 323.0 | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | ஓ.நா | 355.0 | 354.5 | 341.0 | 327.0 | 299.0 | 291.0 | 253.2 | 234.3 | 230.0 | 215.0 | 252.0 |
| ஒக். | 362.6 | 330.0 | 337.5 | ஓ.நா | ஓ.நா | 399.2 | 385.6 | 373.2 | 364.6 | 346.0 | 283.5 | 263.0 | 255.3 | 250.3 | 250.0 | 238.6 |
| நவம்பர் | 406.8 | 417.0 | 375.0 | 302.5 | ஓ.நா | 447.1 | 445.3 | 434.3 | 421.0 | 404.7 | 336.3 | 287.5 | 286.6 | 269.6 | 265.0 | 270.5 |
| டிசம்பர் | 430.0 | ஓ.நா | 390.5 | 380.0 | ஓ.நா | 459.1 | 455.5 | 447.7 | 441.2 | 387.6 | 343.3 | 324.7 | 310.5 | 294.0 | 292.5 | 274.1 |
| பொதுவான | 350.0 | 319.4 | 318.8 | 288.9 | 258.7 | 357.8 | 355.6 | 340.3 | 326.1 | 275.1 | 255.3 | 241.9 | 236.4 | 233.9 | 224.9 | 221.4 |

அட்டவணை இலக்கம் XXXVIII

| கொழும்பு இறப்பர் ஏலசிற்பனையின் இறப்பரின் சாதாரண விலைகள் 2010 - 2020 | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | சீட் இறப்பர் (ஆர்.எஸ்.எஸ்) | | | | | லேடெக்ஸ் கிராப் | | | | | ஸ்கிராப் கிராப் | | | | | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 1X | 1 | 2 | 3 | 4 | 1XBR | 2XBR | 3XBR | No.4 | F.B. | SKIM |
| 2010 | 402.71 | 394.52 | 390.63 | 379.47 | 373.01 | 437.57 | 453.19 | 439.49 | 420.15 | 380.60 | 363.51 | 356.15 | 348.98 | 342.77 | 332.86 | 315.42 |
| 2011 | 513.05 | 504.56 | 492.45 | 486.12 | 470.92 | 575.65 | 566.93 | 542.02 | 502.89 | 471.71 | 461.83 | 452.71 | 442.25 | 441.54 | 428.49 | 413.67 |
| 2012 | 416.61 | 409.56 | 398.21 | 386.27 | 382.58 | 410.84 | 405.01 | 395.72 | 389.01 | 384.78 | 377.09 | 365.85 | 357.79 | 350.26 | 335.11 | 344.71 |
| 2013 | 376.78 | 369.00 | 360.70 | 337.30 | 341.79 | 397.33 | 389.89 | 372.01 | 353.67 | 320.67 | 309.04 | 296.78 | 281.84 | 271.85 | 262.07 | 253.64 |
| 2014 | 287.84 | 281.25 | 270.37 | 265.81 | 265.44 | 311.19 | 303.34 | 272.91 | 244.79 | 222.68 | 214.42 | 207.36 | 203.35 | 196.17 | 185.49 | 190.84 |
| 2015 | 252.16 | 248.02 | 247.60 | 233.93 | 236.52 | 276.65 | 270.01 | 249.81 | 231.00 | 195.94 | 181.63 | 170.66 | 164.98 | 157.30 | 143.08 | 114.62 |
| 2016 | 238.97 | 229.28 | 231.36 | 223.33 | 226.31 | 262.38 | 258.66 | 238.37 | 220.35 | 188.19 | 179.56 | 175.74 | 173.29 | 168.08 | 156.14 | 143.88 |
| 2017 | 337.27 | 330.48 | 324.50 | 309.57 | 295.79 | 351.64 | 348.01 | 336.32 | 322.53 | 280.39 | 269.51 | 262.71 | 256.41 | 250.20 | 230.62 | 221.44 |
| 2018 | 281.64 | 269.03 | 263.11 | 251.26 | 249.63 | 310.99 | 303.52 | 270.01 | 258.89 | 216.62 | 210.60 | 207.69 | 208.21 | 204.23 | 192.42 | 198.64 |
| 2019 | 288.48 | 282.83 | 272.43 | 269.69 | 253.46 | 302.26 | 297.65 | 282.80 | 274.16 | 253.27 | 245.05 | 239.71 | 236.14 | 231.72 | 220.48 | 220.13 |
| 2020 | 350.04 | 319.42 | 318.86 | 288.92 | 258.73 | 357.89 | 355.61 | 340.38 | 326.16 | 275.13 | 255.31 | 241.96 | 236.43 | 233.91 | 224.99 | 221.48 |

அட்டவணை XXXIX

| இறப்பர் வர்த்தகர்களினால் விவசாயிகளிடமிருந்து இறப்பர் பெற்றுக் கொண்ட விலையில் மாதாந்தம் சராசரி (Farm Gate Price) 2020 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | ஆர்.எஸ்.எஸ். | | | | | இறப்பர் பால் |
| | 1 | 2 | 3 | 4 | 5 | |
| ஜனவரி | 289.35 | 286.43 | 279.37 | 273.62 | 270.91 | 273.33 |
| பெப்ரவரி | 277.56 | 274.08 | 267.94 | 261.64 | 258.10 | 255.00 |
| மார்ச் | 256.73 | 256.73 | 254.42 | 251.39 | 251.67 | 254.21 |
| ஏப்ரல் | 238.75 | 242.00 | 232.00 | 208.00 | 208.00 | 230.00 |
| மே | 229.35 | 227.71 | 221.46 | 214.65 | 214.65 | 213.50 |
| ஜூன் | 245.44 | 241.53 | 236.64 | 228.72 | 229.66 | 218.44 |
| ஜூலை | 253.46 | 249.10 | 244.88 | 237.74 | 235.96 | 219.03 |
| ஆகஸ்ட் | 285.71 | 285.00 | 278.93 | 272.50 | 269.50 | 250.83 |
| செப்டம்பர் | 295.86 | 292.66 | 288.03 | 281.78 | 280.23 | 261.94 |
| ஒக்டோபர் | 288.54 | 281.73 | 278.16 | 269.61 | 268.01 | 253.40 |
| நவம்பர் | 324.82 | 319.40 | 312.37 | 300.90 | 295.83 | 289.87 |
| டிசம்பர் | 373.04 | 360.40 | 358.88 | 343.95 | 343.69 | 317.35 |
| சாதாரண பெறுமதி | 279.88 | 276.40 | 271.09 | 262.04 | 260.52 | 253.08 |

**அட்டவணை இலக்கம் XL**

**சர்வதேச இறப்பர் விலை (2015 – 2020)**

| ஆண்டு | இலங்கை ரூபா | | | |
|---|---|---|---|---|
| | இலங்கை கொழும்பு (RSS 3) | பாங்கொக் தாய்லாந்து (RSS 3) | கொட்டாயம் இந்தியா (RSS 4) | சைகொம் சிங்கப்பூர் (RSS 3) |
| 2015 | 232.90 | 213.97 | 259.61 | 216.43 |
| 2016 | 231.36 | 250.45 | 271.85 | 211.77 |
| 2017 | 324.50 | 311.69 | 322.75 | 307.70 |
| 2018 | 263.11 | 257.00 | 301.80 | 256.01 |

| 2019 | 272.68 | 296.90 | 343.08 | 297.05 |
|---|---|---|---|---|
| 2020 | 318.86 | 327.01 | 339.82 | 322.17 |

**அட்டவணை இலக்கம் XLI**

## 2.9.8. அனுமதிப்பத்திரதார இறப்பர் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்கள்

இறப்பர் கொள்வனவிற்காக வர்த்தகர்களினால் அனுமதிப்த்திரங்களை வழங்குவது கட்டாயம் என்பதுடன் சட்டத் தேவைகளுக்கு அமைய அனுமதிப்த்திரங்களைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்களின் அனுமதிப்த்திரத்தை வருடாந்தம் புதுப்பிக்க வேண்டும். 2020 ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியில் இறப்பர் வர்த்தகர்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட முறைகள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| மாவட்டங்கள் | புதுப்பிக்கப்பட்ட டட அனுமதிப்பத்திர ங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்தி ரங்களின் எண்ணிக்கை | மெத்தம் |
|---|---|---|---|
| களுத்துறை | 171 | 07 | 178 |
| கேகாலை | 140 | 14 | 154 |
| கம்பஹ | 22 | 01 | 23 |
| குருநாகலை | 10 | - | 10 |
| கண்டி | 09 | 02 | 11 |
| மாத்தளை | 03 | - | 03 |
| இரத்தினபுரி | 134 | 13 | 147 |
| கொழும்பு | 43 | - | 43 |
| காலி | 24 | 02 | 26 |
| மாத்தரை | 26 | 04 | 30 |
| ஹம்பாந்தோட்டை | 01 | - | 01 |
| மொணராகலை | 21 | 02 | 23 |
| **மொத்தம்** | **604** | **45** | **649** |

**அட்டவணை இலக்கம் XLII**

2020 ஆம் ஆண்டில் வர்த்தகர்களினால் 604 அனுமதிப்பத்திரங்கள் புதுக்கப்பட்டதுடன் திணைக்களத்தினால் புதிய 45 அனுதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.

### 2.9.9. சர்வதேச செயற்பாடுகள்

இலங்கை சர்வதேச இறப்பர் கற்கை நிறுவக (International Rubber Study Group - (IRSG) மற்றும் இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கதத்தின் (Association of Natural Rubber Producing Countries - (ANRPC). அங்கத்துவம் வகிக்கப்படுகின்றது.

இந் நிறுவனங்களில் அங்கத்துவத்தை விகிப்பதன் மூலம் அந் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு நேரடியாக மற்றும் ஊக்கத்துடன் பங்களிப்பு செய்வதன் மூலம் பரஸ்பார ரீதியில் இறப்பர்

கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு பயன்மிக்க நிலமைகளை உருவாக்கிக் கொள்ள முடிகின்றது. மேலும், அந் நிறுவனங்களுக்கு உள்நாட்டு இறப்பர் விலை, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தகவல்கள், விளை நிலத்தின அளவு, துறையில் ஈபடுவேரின் எண்ணிக்கை உட்பட தேவையான அனைத்து தனவல்களும் தேவையான சந்தர்பங்கங்களில் அறிக்கைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அந் நிறுவனங்களினால் ஏனைய நாடுகளின் தகவல்களைப் பெற்றுக் கொண்டு உரிய தரப்பினருக்கு இடையே விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2020 ஆம் ஆண்டில் இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்தின் (ANRPC) வருடாந்த மாநாட்டை நடாத்துவதற்கு கொவிட் தொற்று நோய் நிலமைக்கு மத்தியில் முடியவில்லை. அவ்வாறு இருந்த போதிலும் இடைக்கிடையே அங்கத்துவ நாடுகளுக்கு இடையே நவீன தொழில்நுட்பம் ஊடாக இணைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.9.10 கூட்டிணைந்த நிதியம்

| செலிவின விடயம் | | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | 2020.12.31 ஆம் திகதியன்று தேறிய செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | | | |
| சம்பளம் கொடுப்பனவு | 1001 | 190,000,000.00 | 183,664,358.94 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் | 1002 | 6,300,000.00 | 6,081,753.70 |
| ஏனைய கொடுப்பனவு | 1003 | 72,000,000.00 | 67,740,332.64 |
| பிரயாணச் செலவினம் - உள்நாடு | 1101 | 11,100,000.00 | 11,032,724.11 |
| பிரயாணச் செலவினம் - வெளிநாடு | 1102 | 1,000,000.00 | 0.00 |
| காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 1201 | 4,100,000.00 | 3,888,475.26 |
| எரிபொருள் | 1202 | 6,000,000.00 | 5,880,175.47 |
| உணவு பானங்கள் மற்றும் சீருடை | 1203 | 500,000.00 | 424,407.06 |
| ஏனையவை | 1205 | 500,000.00 | 303,704.25 |
| வானப் பராமரிப்பு | 1301 | 5,000,000.00 | 4,994,422.26 |
| இயந்திரம் மற்றும் இயந்திர உபகரண பராமரிப்பு | 1302 | 500,000.00 | 430,203.20 |
| கட்டம் மற்றும் நிர்மாணிப்பு | 1303 | 300,000.00 | 294,028.20 |
| தபால் மற்றும் தொடர்புசாதனம் | 1402 | 6,000,000.00 | 4,321,855.65 |
| மின்சாரம் மற்றும் நீர் | 1403 | 2,000,000.00 | 1,579,897.88 |
| | | | |
| குத்தகைக் கூலி மற்றும் உள்ளுராட்சி மன்ற வரி | 1404 | 44,100,000.00 | 42,082,907.99 |
| செயற்பாட்டு நீண்டகால குத்தகை வாகனத்திற்காக தவணைக் கொடுப்பனவு | 1408 | 10,000,000.00 | 9,845,200.00 |

| | | | |
|---|---|---|---|
| ஏனையவை | 1409 | 10,400,000.00 | 9,819,790.52 |
| உதவு தொகை மற்றும் பங்காளர் நிதி | 1505 | 8,000,000.00 | 1,182,308.64 |
| அரசாங்க ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி | 1506 | 2,000,000.00 | 1,862,144.65 |
| | | | |
| மூலதன செலவினம் | | | |
| கட்டம் மற்றும் நிர்மாணிப்பு | 2001 | 7,200,000.00 | 7,181,196.90 |
| இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணம் | 2002 | 500,000.00 | 499,522.08 |
| வாகனம் | 2003 | 3,400,000.00 | 3,394,309.33 |
| மனைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2102 | 1,500,000.00 | 1,496,120.50 |
| இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணம் | 2103 | 500,000.00 | 499,924.00 |
| கட்டம் மற்றும் நிர்மாணிப்பு | 2104 | 0.00 | 0.00 |
| மென்பொருள் அபிவிருத்தி | 2106 | 800,000.00 | 789,006,00 |
| பணியாளர் சபை பயிற்சி | 2401 | 1,300,000.00 | 1,222,705.00 |
| அபிவிருத்தி உதவியாளர்கள் | 2202 | 1,000,000,000.00 | 823,010,127.49 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 2507 | 15,000,000.00 | 9,410,706.35 |
| | | | |
| மொத்தம் (முழுமையானது) | | **1,410,000,000.00** | **1,202,932,308.07** |

**அட்டவணை இலக்கம் XLIII**

### 2.9.11 செஸ் வரி கிடைப்பனவு மற்றும் அறவீடுகள்.

இறப்பர்சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்தி செய்யப்படும் கைத்தொழிலாளர்கள் அப் பொர்ருட்களை உற்பத்தி செய்வதற்காக உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யப்பட்ட இயற்கை இறப்பருக்காக செஸ் வரி அறவிடப்படுகின்றது.

2007 இலக்கம் 01 கொண்ட செஸ் வரிக் கட்டளைகளுக்கு அமைய கொள்வனவு செய்யப்படும் முதிராத இறப்பர் 1 கிலோகிராமிற்காக ரூபா் 4/- வீதம் செஸ் வரி செலுத்தப்பட வேண்டும். அவ் வரி நிதி “ பணிப்பாளர் நாயகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்” என்ற முகவரிக்கு கர்சோலை அனுப்ப வேண்டும்.

**செஸ் வரிக்ககா பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் விபரங்கள் - 2020**

| | | |
|---|---|---|
| **2020** ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | - | **146** |
| செஸ் வரி செலுத்தப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை | - | **58** |
| செஸ் செலுத்தப்படும் கம்பனியின் எண்ணிக்கை | - | **58** |
| செஸ வரி செத்தப்படாத நிறுவனங்களின் எண்ணிக்கை | - | **88** |
| செஸ் வரிக்காக பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை | - | **109** |

**உள்நாட்டு நுகர்விற்கமைய அறவிடப்பட்ட செஸ் வரி அளவு**

**மாதாந்த அடிப்படையில் – 2020**

| மாதம் | உள்நாட்டு நுகர்விற்கமைய அறவிடப்பட்ட செஸ்வரி அளவு (ரூபா.மி.) |
|---|---|
| ஜனவரி | **18.85** |
| பெப்ரவரி | **9.21** |
| மார்ச் | **0** |
| ஏப்ரல் | **14.09** |
| மே | **13.29** |
| ஜூன் | **24.09** |
| ஜூலை | **33.54** |
| ஆகஸ்ட் | **17.52** |
| செப்டம்பர் | **20.10** |
| ஒக்டோபர் | **11.76** |
| நவம்பர் | **14.40** |
| டிசம்பர் | **26.98** |
| **மொத்தம்** | 203.83 |

**அட்டவணை இலக்கம் XLIV**

இறப்பர் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியினை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்ட செஸ்வரி நிதி தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு அடிப்படையாகக் கொண்ட அறவிடப்பட்ட செஸ்வரி வரி அளவு மாதாந்த அடிப்படையில் – 2020**

| மாதம் | இறக்குமதிக்கு அமைய அறவிடப்பட்ட செஸ்வரி அளவு (ரூபா.மி.) | ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட அறவிடப்பட்ட செஸ் வரி அளவு (ரூபா.மி) |
|---|---:|---:|
| ஜனவரி | 188.52 | 5.09 |
| பெப்ரவரி | 185.65 | 6.89 |
| மார்ச் | 80.26 | 2.85 |
| ஏப்ரல் | 172.44 | 3.44 |
| மே | 87.73 | 4.16 |
| ஜூன் | 64.19 | 5.87 |
| ஜூலை | 50.85 | 6.95 |
| ஆகஸ்ட் | 68.60 | 28.89 |
| செப்டம்பர் | 73.77 | 4.57 |
| ஒக்டோபர் | 159.69 | 5.34 |
| நவம்பர் | 157.32 | 7.17 |
| டிசம்பர் | 309.08 | 8.50 |
| **மொத்தம்** | **1598.10** | **89.72** |

**அட்டவணை இலக்கம் XLV**

**2015 தொடக்கம் 2020 வரை மொத்த செஸ்வரி அறவீடு தொடர்பான விபரங்கள்**

| ஆண்டு | வரி அறவீடு (ரூபா) |
|---|---:|
| 2015 | 169,315,461.01 |
| 2016 | 169,826,685.48 |
| 2017 | 216,985,124.32 |
| 2018 | 211,268,567.06 |
| 2019 | 226,827,187.71 |
| 2020 | 203,821,239.13 |

**அட்டவணை இலக்கம் XLVI**

**3. வாகம் - 2020 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதி செயற்சாதனை.**

**3.1. நிதி செயற்சாதனை வெளிப்பாடுகள்**

ஏசீஏ- எப்

**2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த கால எல்லைக்கான மொத்த நிதி செயற்சாதனை வெளிப்பாடுகள்.**

**ரூபா.**

| வரவு செலவு 2020 | | குறிப்பு | உண்மையான 2020 | உண்மையான 2019 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான கிடைப்பனவு** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ -1 |
| - | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவை மீது வரி | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகததின் மீர் வரி | 3 | - | - | |
| - | வரியல்லாத வருமான மற்றும் ஏனையவை | 4 | - | - | |
| - | **மொத்த வருமான கிடைப்பனவு (அ)** | | - | - | |
| | | | | | |
| - | **வருமான அல்லாத கிடைப்பனவு** | | - | - | |
| - | திறைசேரி கட்டுநிதி | | 861,071,000.00 | 640,019,000.00 | ஏசீஏ -3 |
| - | வைப்பு | | 30,534,784.00 | 40,701,499.00 | ஏசீஏ -4 ஏசீஏ |
| - | முற்பண கணக்கு | | 16,826,392.00 | 23,350,460.00 | 5/5(அ) |
| - | ஏனைய கிடைப்பனவு | | 346,962,149.00 | 336,654,115.00 | |
| - | மொத்த வருமானமல்லாத கிடைப்பனவு (ஆ) | | **1,255,394,325.00** | **1,040,725,074.00** | |
| - | மொத்த வருமான கடைப்பனவு மற்றும் வருமானமல்லா | | | | |
| | கிடைப்பனவு = (அ) + (ஆ) | | **1,255,394,325.00** | **1,040,725,074.00** | |
| | | | | | |
| | **கழி – செலவினம்** | | | | |
| | **மீண்டெழும் செவினம்** | | - | | |
| **224500000** | சம்பளம், ஏனைய மற்றும் ஏனைய ஊழியர் பிரதிலாபம் | 5 | 257,486,445.00 | 252,395,606.00 | ஏசீஏ 2(ii) |
| **93000000** | ஏனைய பொருட்கள் மற்றும் சேவை | 6 | 94,897,792.00 | 102,248,674.00 | |
| **10500000** | மானிய உதவி, வழங்கள் மற்றும் மாற்றங்கள் | 7 | 3,044,453.00 | 10,797,410.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வட்டி கொடுப்பனவு | 8 | - | - | |
| | ஏனைய மீண்டெழும் செலவினம் | 9 | - | - | |
| **328000000** | மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ) | | **355,428,690.00** | **365,441,690.00** | |
| | | | | | |
| | **மூலதன செலவினம்** | | | | |
| | மூலதன சொத்து மீண்டெழும் புணரமைப்பு மற்றும் அபிவிருத்தி | | | | |
| **19500000** | அபிவிருத்தி செய்தல் | 10 | 11,075,028.00 | 16,876,805.00 | |
| **9700000** | மூலதன சொத்துக்களைப் பொறுப்பேற்றல் | 11 | 2,785,051.00 | 3,490,748.00 | |
| **800000000** | மூலதன மாற்றங்கள் | 12 | 823,010,127.00 | 564,063,205.00 | ஏசீஏ - **2(ii)** |
| | நிதி சொத்துக்களைப் பொறுப்பேற்றல் | 13 | - | - | |
| **1800000** | இயலுமை விருத்தி | 14 | 1,222,705.00 | 1,390,714.00 | |
| **15000000** | ஏனைய மூலதன செலவினம் | 15 | 9,410,706.00 | 8,206,165.00 | |
| **846000000** | **மொத்த மூலதன செலவினம் (உ )** | | **847,503,618.00** | **594,027,637.00** | |
| | | | | | |
| | **மூலதன நாளேட்டு செலவினம் (ஊ)** | | 52,407,791.00 | - | |
| | வைப்புக் கொடுப்பனவு | | 32,424,911.00 | 55,786,353.00 | ஏசீஏ **-4** |
| | முற்பணக் கொடுப்பனவு | | 19,982,880.00 | 25,220,425.00 | ஏசீஏ **-5** |
| | மொத்த செலவினம் எ = ( ஈ+ஊ+உ ) | | 1,255,340,099.00 | 1,040,476,106.00 | |
| | 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கட்டுநிதி நிலுவை | | - | - | |
| **1174000000** | எ = (இ- உ ) | | **54,226.00** | **248,968.00** | |

**அட்டவணை இலக்கம் XLVII**

## 3.2. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதன் செயற்சாதனைகள்

**ரூபா.**

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு | | உண்மையாள செலவினம் | பயண்படுத்தப்படும் ஒதுக்கீடுகள் பூர்த்திசெய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவில் % என்ற அடிப்படையில் |
|---|---|---|---|---|
| | நிதி ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| **மீண்டெழும் செலவு** | 380,000,000 | 379,800,000 | 355,428,690.42 | 93.58% |
| **மூலதனம்** | 1,030,000,000 | 1,030,200,000 | 847,503,617.65 | 82.27% |

**அட்டவணை இலக்கம் XLVIII**

**3.3.** நன்கொடை மற்றும் ஏனைய கிடைப்பனவு தொடர்பான செயற்சாதனை சம்பந்தப்பட்டதல்ல.

## 3.4. நிதியல்லாத சொத்து அறிக்கைப்படுத்தும் செயற்சாதனை

ரூபா.

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரங்கள் | 31.12.2020 ஆம் திகதியன்று மற்றும் பொருள் ஆயவு அறிக்கைக்கு அமைய நிலுவை ඉ | 31.12.2020 ஆம் திகதியன்று நிதி நிலமை அறிக்கைக்கு அமைய நிலுவை | எதிர்வரும் காலங்களில் கணக்கீட்டிற்கு உரியதாக | முன்னேற்றம் % என அறிக்கைப் படுத்தல் |
|---|---|---|---|---|---|
| **9151** | கட்டடம் மற்றும் கட்டமைப்பு | | 181,929,111.60 | | |
| **9152** | இயந்திர உபரகரணம் | 223,361,566.60 | 178,302,366.80 | 45,059,199.80 | 100% |
| **9153** | காணி | | 408,370,800.00 | | |
| **9154** | கட்புலனாகும் சொத்து | | | | |
| **9155** | உயரியல் விஞ்ஞான சொத்து | | | | |
| **9160** | தற்போது அமுல்படுத்தும் பணிகள் | | | | |
| **9180** | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் | | | | |

**அட்டவணை இலக்கம் XLIX**

## 3.5 கணக்காய்வாளர் அறிக்கை

PLA/C/RDD/02/20/03 03 ஆகஸ்ட் 2021

கணக்கு வழங்கும் உத்தியோகத்தர்

இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

**இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) வாசகத்திற்கு அமைய கணக்காய்வாளரின் அறிக்கை.**

1. **நிதி வெளிப்பாடுகள்**

---

**1.1 பொருத்தமான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாத கருத்துக்கள்**

---

இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலமை வெளிப்பாடுகள், அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்சாதனை வெளிப்பர்டுகள் மற்றும் நிதிப் பாயச்சல் வெளிப்பாடுகளில் அடங்கும் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டதிதின் ஒழுங்குவிதிகளுடன் இணைத்து வாசிக்க வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பின் 154(1) பிரமாணக்குறிப்பில் உள்ளங்கும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய எனது கட்டளைக்கு அமைய கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) வாசகத்திற்கு அமைய இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு சமர்பிக்கப்படும் இந் நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக எனது கருத்தினை தொவிப்பதற்கு மற்றும் மேற்பார்வைகள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் யாப்பில் 154(6) பிரமாணக்குறிப்புடன் இணைத்து வாசிக்க வேண்டிய 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆவது வசாகத்திற்கு அமைய சமர்பிக்க வேண்டிய கணக்காய்வாளர் அறிக்கை எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படுகின்றது.

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி வெளிப்பாடுகளில் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலமைகள் மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்சாதனை மற்றும் நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடுகள் பொதுவான அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலமை சித்தரித்துக் காண்பிக்கப்படுவது என்பது எனது கருத்தாகும்.

## 1.2 கருத்துக்கான அடிப்படை

-----------------------

இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு அமைய (இக.த) அமைய மற்றும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இக் கணக்காயவுத் தரத்தின் கீழ் எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதி வெளிப்பாடுகள் தொடர்பில் எனது பொறுப்புக்கள் என்ற பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்திற்கான அடிப்படையிலான வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதியளவு மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதி வெளிப்பாடுகள் தொடர்பில் கணக்கு வழங்கும் உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

----------------------------------------------------------------------------------------------------

பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மூல அம்சங்களுக்கு அமைய மற்றும் 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 வாசகத்தில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலமை சித்தரித்துக் காண்பிக்கக் கூடியவாறு நிதி வெளிப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய அளவையியல் ரீதியிலான போலி அறிக்கைகள் இன்றி நிதி வெளிப்பாடுகளைத் தாயாரிக்கும் வகையில் தேவையான உள்ளக நிருவாகத்தை தீர்மானிப்பது கணக்கு வழங்கும் உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) வாசகத்திற்கு அமைய திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் சமாகால நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கக் கூடிய வகையில் தமது வருமான, செலவின, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேனப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப வாசகத்திற்கு அமைய திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயன்மிக்க உள்ளக நிருவாக முறைமையினைத் தயாரித்து முன்னெடுக்கப்படுவதாக கணக்கு வழங்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் பயன்பாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்விற்கு உட்படுத்தி அதற்கு அமைய முறைமையினை பயன்மிக்கதாக முன்னெடுப்பதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதி வெளிப்பாட்டு கணக்காய்வுகள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

--------------------------------------------------------------------

முழுமையாக நிதி வெளிப்பாடுகள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவையியல் ரீதியிலான போலி வெளிப்பாடுகள் இல்லை என்பதனை நியாயமான உறுதிப்பாடுகளை வழங்குதல் மற்றும் எனது கருத்திற்கு அமைய உள்ளடக்க கணக்காய்வு

